Free Circulation Germany- England
மணி: 71 - ஓசை: 298 ஆடி. July. 2021

# வெற்றிமணி
Vettimaniy
ESTD 1950

27TH years IN EUROPE Successful Publishing

பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன்.B.F.A






## இந்தியா என்ன செய்யப்போகின்றது?

அரசியல் களம் → கொழும்பிலிருந்து ஆர்.பாரதி





எத்தனை கோடி இன்பம் வைத்தாய்

Dr.IN

ஒன்றாக வாழுகின்றோம்
ஒன்றாகவா வாழுகின்றோம்

## பேசிப் பேசிப் போவோம் கண்ணே!





# பேசிப் பேசிப் போவோம் கண்ணே!

இப்ப எல்லாம் தெருவில் மனித நடமாட்டம் அருகிப்போச்சு. அப்படி நடமாடினாலும் நாயோடு நடப்பதும் அதோடு நயமாய் பேசுவோரையும் தான் காணமுடிகிறது.

covid 19, காலம் வாயைக்கட்டிக் கொண்டு நடக்கிறதுதானே, பேச்சு என்ன வேண்டிக்கிடக்கு என்று என்னைக் கடிப்பது தெரியும். இருந்தாலும் அப்போ பாடசாலைக்கு என்றால் என்ன , சந்தைக்கு என்றால் என்ன, பேசிப் பேசியே நடந்த காலம் மலையேறிப்போச்சு.

வீட்டுக்குள் தொடர்ந்து இருந்தால் தொந்தரவு உடம்புக்கு என்று, வெளியே நடப்போம் என்றால்,வெளியே ஒரு நாயையும் காணோம். அப்படி என்றால் மனிதனையும் காணமுடியாது தானே!.

இருந்தாலும் எனக்குள் பேசுவது எனக்கு கைவந்த கலை. மற்றவர்களுக்கு கேட்டாலும் இந்தக் காலத்தில் எவரும் பிழையாக நினைக்கமாட்டினம். தனிய போனிலை கதைக்கிறேன் எண்டு தானே நினைப்பினம். வாய் காது எல்லாம் முகக் கவசம் மறைக்குது அல்லவா!

தூரத்தில் ஒருவர் என் மனக்குமுறலை போக்க சமாதானக் கொடி பிடித்து வருகிறார். என் வாழ்வில் இப்படி ஒருத்தியை இப்போதுதான் காண்கின்றேன். என்னை மிகவிரைவாக அண்மித்து விட்டாள். என்னைக் கண்டதும் நின்று விட்டாள்.

காரணம் அவள் பாதையில் நான்



குறுக்கிட்டு நிற்கிறேன். நான் விலக அவள் மீண்டும் விரைகிறாள்.

அவள் வேறுயாரும் அல்ல. இப்போது இங்கிலாந்தில் பரீட்சாத்தியமாக விடப்பட்டுள்ள [Starship] டிலிவறி ரோபோ. அவளை சென்ற மாதம் இங்கிலாந்தில் Milton Keynes நகரில் சந்தித்தேன்.

வீட்டில் இருந்து ஓடர் பண்ணினால் ஓடிவந்து தருவாள். மருந்து, உணவு,



மாதவி (யேர்மனி)

மளிகை பொருட்கள், என்பவற்றை காவிக் கொண்டு வந்து உங்கள் வீட்டு வாசலுக்கு வருவாள். வந்ததும் உங்கள் போனுக்கு மெசேச் பண்ணுவா. நீங்கள் அவள் முதுகில் உள்ள கோட் வேட்டில் ஸ்கேன் பண்ண பொருட்கள் உள்ள பெட்டி திறக்கும்.நீங்கள் எடுக்கலாம்.

இந்த ரோபோவின் பெயர் Starship சரி என் கதைக்கு வருகிறேன். நான் வழி மறித்து நிற்க நின்றவள், நான்



விலக விரைந்து செல்கிறாள். அதற்கு சுற்றும் முற்றும் கண்கள். அதனால் தான் இந்த ரோபோவைப் பெண் என்றேன். இல்லை என்றால் இவ்வளவு பாதுகாப்பாக தெரிவில் எப்படி வர முடியும்.

அவளுக்கு இடைஞ்சல் செய்தால் உடன் ஒரு சத்தம் போடுவாள்.நான் நினைக்கிறேன் அவள் மேலிடத்திற்கு என்னை படத்துடன் அறிவித்து விடுவாள் என்று. அதனால் அவளை நகரவிட்டு காதலியை பின் தொடர்ந்து நல்லபடி பேசி பேசிக்கொண்டு நடந்தேன். தெருவைக் கடக்கவேண்டும். நின்றுவிட்டாள், இருபுறமும் கடைக் கண்ணால் பார்த்துவிட்டு தெருவைக் கடந்தாள். நான் தொடர்ந்து சென்றேன். ஒரு இடத்தில் சிறிய படி இருந்தது உடன் அவள் சிறிது பின்னே சென்று ‘வெள்ளத்திற்கு பாவாடையை கொஞ்சம் உயர்த்தி நடப்பவள் போல் ’ அவளும் தன்னை உயர்த்திக் கொண்டு நகர்ந்து சென்றாள்.

செல்ல வேண்டிய இடம் வந்ததும் நின்றாள். ஒரு பெண் வந்து அவள் முதுகில் உள்ள கோட் வேட்டில் ஸ்கேன் பண்ணி பொருட்களை எடுத்து சென்றாள்.

நான் அப்போ ரிவுஷன் முடிந்து வரும் காதலியுடன் பேசிப் பேசிப் போக காத்திருக்கும் காதலன் போல் மறைந்து நின்றேன். நான் இன்னும் அவளை பின்தொடர்வேன் எங்கு இருந்து புறப்படுகிறாள். இடர்களை எப்படி எல்லாம் எதிர்கொள்கிறாள். அவள் இயங்க என்ன சக்தி பயன்படுத்துகிறாள். அவளுக்கு வழியில் ஒரு ஆபத்து என்றால் என்னை விட யார் உதவுவார்கள். இவை எல்லாம் அறிய நான் அவளைப் பின் தொடர்வேன். [வேறு ஒரு காதல் பிறக்கும் வரை]

**பி.குறிப்பு: இப்படி 5500 ரோபோக்கள் இங்கிலாந்தில் பரீட்சார்த்த சேவையில் விடப்பட்டுள்ளது.**








விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

**வெற்றிமணி**

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்

ஓசை : 298



ஆரம்பம்: 1950

ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன். பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
'ஓவியக்கலைவேள்'
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A
Chief Edito:
Dr.M.K.S.Sivakumaran B.F.A



Tel: +49 01631992333

+49 01631992333

e-mail: vettimaniy@hotmail.com


"வெற்றிமணிமொழி"
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது


Vettimaniy Ltd
Company No: 8876276





# இந்தியா என்ன செய்யப்போகின்றது?

**கொழும்பிலிருந்து**
**ஆர்.பாரதி**

இலங்கையில் அதிகரித்துவரும் சீனாவின் பிரசன்னம் குறித்து இந்தியா தமது அக்கறையை அண்மைக் காலமாக வெளிப்படையாகப் பேசத் தொடங்கியிருக்கின்றது. கொழும்பில் சீனா அமைத்திருக்கும் துறைமுக நகரம், இந்தியாவின் கடல்சார் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலைக் கொடுக்கும் அளவுக்கு அதிகாரங்களைப் பெற்றிருக்கும் நிலையில், இனிமேலும் மௌனமாக இருக்க முடியாது என்ற நிலைக்கு இந்தியா தள்ளப்பட்டிருக்கின்றது. ஆனால், வெறுமனே கருத்துக்களை வெளியிடுவதுடன் இந்தியா நிறுத்திக்கொள்ளுமா? அல்லது இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் எதனையாவது செய்யுமா? என்ற கேள்வியும் இங்குள்ளது.

இலங்கையில் சீனா புதிய துறைமுக நகரம் ஒன்றை அமைத்திருப்பது இந்தியாவின் நலன்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடும் எனத் தெரிவித்திருக்கும் இந்திய கடற்படை துணைத் தளபதி அட்மிரல் ஐ.அசோக் குமார், இந்த நடவடிக்கைகளை இந்தியா உன்னிப்பாக அவதானிக்க வேண்டியிருப்பதாகவும் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

12 ஆம் பக்கம் பார்க்க...



கே.எஸ்.சுதாகர்
(மெல்போன்– அவுஸ்திரேலியா)




# தனக்குத் தானே!



சமீபத்தில் சண்முகசுந்தரம் என்பவர் தொலைபேசியில் என்னுடன் பேசினார்.

‘‘தம்பி... எனக்கொரு உதவி செய்யவேண்டும். உங்களுக்கு எங்கடை முதியோர் சங்க செயலாளர் நந்தகுமாரைத் தெரியும் என்று நினைக்கின்றேன். அவர்தான் உங்களிடம் கேட்டால், நீங்கள் செய்து தருவீர்கள் என்று சொன்னார். என்னுடைய பெயர் சண்முகசுந்தரம். எனக்கு நீங்கள் தமிழில் ஒரு கடிதம் தட்டச்சுச் செய்து தரவேண்டும்.’’

‘‘நந்தகுமாரா... அவர் எனக்கு வேண்டியவராயிற்றே! என்னவென்று சொல்லுங்கள்? கட்டாயம் செய்து தருகின்றேன்.’’

‘‘நீங்கள் தட்டச்சு செய்யவேண்டியதை நான் தபாலில் அனுப்பி வைக்கின்றேன். நீங்கள் தட்டச்சுச் செய்தவுடன் என்னுடைய மின்னஞ்சலுக்கு அனுப்பிவிடுங்கள்.’’

‘‘நல்லது. அனுப்பி வையுங்கள்.’’

‘‘நன்றி தம்பி.’’

இரண்டு நாட்களில் ஒரு கசங்கிய பேப்பரில் அந்தக் கடிதம் வந்து சேர்ந்தது. கடிதத்தில் இருந்தது இதுதான்:

கந்தையா சண்முகசுந்தரம் என்பவர், முருகன் கோவில் சபையின் தலைவராக பத்து ஆண்டுகள் இருந்து தமிழ், சமயம், கலை ஆகியவற்றுக்கு மிகவும் சிறந்த சேவை ஆற்றி வருகின்றார்.

இவர் தமிழில் பாண்டித்தியம் இல்லாத மாணவர்களுக்காக தொல்காப்பியம், திருக்குறள், சிலப்பதிகாரம் ஆகிய நூல்களின் சாரத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இவரின் சேவையால் பல மாணவர்கள் தமிழில் ஆர்வம் கொள்கிறார்கள்.

இவர் பல பத்திரிகைகள் சஞ்சிகைகளுக்கு தமிழிலும் ஆங்கிலத்திலும் கட்டுரைகள் எழுதுகிறார்.

இவர் தமிழுக்கும், சமயத்துக்கும் செய்த சேவையைப் பாராட்டி பொன்னாடை போர்த்திக் கௌரவிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

அவர் எழுதிய கடிதத்தை தட்டச்சு செய்யும்போது எனக்கொரு சந்தேகம் எழுந்தது. என்னுடன் கதைத்தவரின் பெயர் சண்முகசுந்தரம் என்று சொன்னதாக நினைவு. அப்படியென்றால் அவர் தனக்குத் தானே பொன்னாடை போர்த்திக் கௌரவிக்குமாறு கேட்டுக் கொள்கின்றாரா?

கடிதத்தின் கீழே அனுப்பவேண்டிய மின்னஞ்சல் முகவரி இருந்தது. அவருக்கான கடிதத்தை நான் மின்னஞ்சல் செய்துவிட்டு, நந்தகுமாருடன் தொடர்பு கொண்டேன்.

‘‘என்ன செய்யுறது தம்பி! இந்த நாளிலை சமூகத்துக்கு ஒண்டுமே செய்யாமல் ஏ, பி க்கு பொன்னாடை போர்க்கின்றார். பின்னர் பி,ஏக்கு பன்னாடை போர்க்கின்றார். இப்பிடியே மாறி மாறி ஆளாளுக்குப் போத்துக்கொண்டும், பட்டங்கள் குடுத்துக் கொண்டும் திரியினம். சண்முகசுந்தரம் தன் வாழ்நாள் முழுவதும் சமூகத்துக்கு சேவை செய்து செய்தே நோயாளியாகிப் போனார். பாவம் மனிசன்... தனக்குத்தானே கடிதம் எழுதுகின்றார். நீங்கள் கடிதத்தை அனுப்புங்கோ. நான் கையெழுத்துப் போட்டு அனுப்பி வைக்கின்றேன். அப்பிடியெண்டால்தானே பிறகு அந்தாளும் எனக்குக் கடிதம் எழுதும்’’ என்றார் நந்தகுமார்.

நந்தகுமார் ஒரு கணிதப் பேராசிரியர். ஏ பி எண்டு சொல்லி விஷயத்தை நாசுக்காகச் சொல்லி வைத்தார்.

---

**மீண்டும் தேர்க்காலம்**

# சுவிற்சர்லாந்து ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தின் தேர்த்திருவிழா!







ஐரோப்பாவில் பிரசித்தி பெற்ற ஆலயமாக விளங்கும் சுவிற்சர்லாந்து செங்காலன் சென்மார்க்கிறெத்தன் அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் பக்திபூர்வமாகவும் சிறப்பாகவும் இடம்பெற்றது.

சுவிற்சர்லாந்தில் செயற்பாட்டிலுள்ள சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா கடந்த 22.05.2021 அன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 9ஆம் நாள் திருவிழாவான தேர்த்திருவிழா 29.05.2021 சனிக்கிழமையன்று காலை 10 மணியளவில் கதிர்வேலர் சித்திரத்தேரில் வெளிவீதி வலம்வந்து பக்தர்களுக்கு அருள்காட்சி வழங்கினார்.

பக்தர்கள் காவடி எடுத்தும், கற்பூரச்சட்டி ஏந்தியும், பிரதட்டை செய்தும், அடி அழித்தும்,பாற்செம்பு ஏந்தியும் தங்கள் நேர்த்திகளை பூர்த்தி செய்து கொண்டனர். சுவிஸிலுள்ள பல்வேறு மாநிலங்களிலிருந்து வந்த பக்தர்கள் கதிர்வேலரின் அருட்காட்சியைப்பார்த்து பிரார்த்தித்து மகிழ்ந்தனர். கோவிட் 19 தாக்கத்தின் பின் மீண்டும் தேர்க்காலம் ஆரம்பம். விதிமுறைகளையும் பின்பற்றுவோம்.




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# முக்கோண காதலால் முறிந்து போன டயானா திருமணம்




பிபிசி தொலைக்காட்சியில் பனோரமா [ Panorama] என்றொரு அரசியல் ஆய்வு நிகழ்ச்சி தொடர்ந்து ஒளிபரப்பாகிறது. உலக அரங்கில் அந்த வாரம் முக்கியத்துவம் பெற்ற விஷயங்கள் குறித்து சம்பந்தப்பட்டவர்களோடு விரிவாக இந்த நிகழ்ச்சியில் அலசப்படும். பிபிசியின் பக்கச்சார்பின்மை தனித்துவம் ஆகியவற்றால் இந்த நிகழ்ச்சி பல வருடங்களாக புகழ் ஏணியின் உச்சியில் நின்றது. பிபிசி என்ற அழகிய மயிலின் ஆட்டம் போல தாங்களும் ஆடித்தான் பார்ப்போமே என்று துணிந்து இங்கு பிரிட்டனிலும், உலகின் பல நாடுகளிலும் உள்ள பல்வேறு தொலைக்காட்சி நிறுவன ஹஹவான்கோழிகள்'' தங்கள் பொல்லாச் சிறகை விரித்து ஆட முயன்றன, ஆடின, ஆடித் தோற்றன. பிபிசியின் பனோரமாவுக்கு நிகர் பனோரமாவே தான்!

பிபிசியின் பேசு பொருளாகியிருக்கும் ஒரு விஷயம் அது அணு ஆயுதம் சம்பந்தப்பட்டதாக இருந்தாலும் சரி, அல்லது சாதாரணமாக ஒரு குடும்ப விவகாரமாக இருந்தாலும் சரி உலக மக்களின் கவனத்தை ஈர்த்துவிட்டது என்று கருதப்பட்டால், அது அடுத்த வாரம் பனோரமாவில் விவாதிக்கப்படும். பிபிசியின் கண்ணியம், நடுநிலைமை ஆகியவற்றின் மீது அப்படியொரு மக்கள் நம்பிக்கை இருந்து வந்தது. இந்தப் பெரும் புகழை எல்லாம் ''எந்தப் பாம்புக் கண்ணி பார்த்தாளோ?'' பிபிசி பனோரமா புகழை அதல பாதாளத்திற்கு தள்ளி விடுவதைப் போல ஒரு அவதூறு 1995ல் நடந்தது. அந்தச் சம்பவம் பிபிசி பனோரமாவுக்கு இளவரசி டயானா வழங்கிய ஒரு செவ்வி.



விமல் சொக்கநாதன் (இங்கிலாந்து)

இளவரசி டயானா, ஒரு பிரிட்டிஷ் அரச குடும்பத்தவர் மட்டுமல்ல, பிரிட்டிஷ் பேரரசியாரின் மூத்த மருமகளாகவும் இருந்தார். இதனால் சாதாரண பேட்டி காண்பதற்குரிய நட்சத்திர அந்தஸ்துகளையும் தாண்டி மிகவும் உயரத்தில் நின்றார் என்பது உலக ஊடகத்தினர் அனைவருக்குமே தெரியும். இதனால், எந்தவொரு ஊடகமும் அவரை ஒரு பேட்டிக்காக அணுகியது கிடையாது. 1981ல் -32 வயதான இளவரசர் சார்ள்ஸ் 19 வயதான டயானாவை திருமணம் செய்தார். தம்பதிகளுக்கு இடையில் இருந்த 13 வயது வித்தியாசம் இருந்தது. இந்த வயது வேறுபாடு பல ஆசிய, ஆப்ரிக்க நாடுகளில் பெரும் பொருட்டாக இருந்ததில்லை, ஆனால் பிரிட்டிஷ் அரச குடும்பத்தில் இந்த வயது வித்தியாசம் மிகப் பெரும் பிரச்சனையாக அப்போது பேசப்பட்டது. போதாக் குறைக்கு இளவரசர் சார்ள்ஸின் தந்தை அண்மையில் காலமான பிலிப் கோமகனின் தாய் மாமாவான மவுண்ட் பேட்டன் பிரபு இளவரசர் சார்ள்ஸக்கு வழங்கிய அறிவுரைகளில் ஒன்று-''உன் மணமகள் முன் அனுபவம் எதுவும் இல்லாதவளாக இருக்க வேண்டும்''.



முன் அனுபவம் என்று அவர் கூறியது காதல் கத்தரிக்காய் போன்ற சமாச்சாரங்கள் தான். 1930 களில் இந்த நிபந்தனை ஏற்றதாக இருந்திருக்கலாம். ஆனால் 1980களில் இது ஏற்புடையதாக இருக்கவில்லை. ஆனால் காலங்கள் மாறுகின்றன. இளவரசி டயானாவை [முன் அனுபவ சமாச்சாரங்கள் எதுவுமே இல்லாத]-13 வயது குறைந்த இளம் பெண்ணை இளவரசர் சார்ள்ஸக்கு சட்டுபுட்டென்று பேசி முடிக்கிறார்கள்.

இளவரசருக்கு திருமணத்திற்கு முன் ஏராளமான பெண் தோழிகள் இருந்தார். அவருக்கு முன் அனுபவம் ஏராளமாக இருந்தது. அவர்களில் ஒருவர் கமீலா. இளவரசருடன் நெருங்கி பழகி வந்தாள். ஆனால் இளவரசரை விட ஒன்றரை வயது மூத்தவர் அவர். இளவரசர் சார்ள்ஸ் பிரிட்டிஷ் கடற்படையில் சேர்ந்து, பணியாற்ற அழைப்பு வந்தது. இப்படி அவர் புறப்பட்டு போக இராணுவ அதிகாரியான பார்க்கர் பௌல்ஸ் என்பவரை கமீலா திருமணம் செய்து கொண்டார். குழந்தைகள் பெற்று கொண்டார். முதல் குழந்



தைக்கு Godfather இருக்கும்படி தன் நண்பன் சார்ள்ஸைக் கேட்டுக் கொண்டாள். அவரும் சம்மதித்தார். [மனம் வருந்தாதே மகனே, நீமுடி சூடும் போது உன் கமீலாவே உன் ராணியாக அருகில் அமருவாள் என்று பிரம்மன் அசரீரி ஒலித்திருக்கலாம்] 1981 பிப்ரவரி மாதம் 24ஆம் திகதி சார்ள்ஸ்-டயானா திருமணம் ''உலகத் தொலைக்காட்சிகளில்

28 ஆம் பக்கம் பார்க்க...



# தமிழ்நாட்டில் தமிழின் நிலை!

## மம்மி, டாடி, அங்கிள்




கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திற்கு முன் தோன்றிய மூத்த குடியினர் என பரிமேலழகர் கூறுவார். மொழி நம் பண்பாட்டின் விழுமியம். மொழியில்லாத வாழ்க்கை ஒளி இல்லாதது போன்றது. திராவிட மொழிக் குடும்பத்தின் தாயாகத் திகழ்வது தமிழ் தான் தமிழில் இருந்துதான் திராவிட மொழிகள் தோன்றின.

தமிழ்மொழி இயல், இசை, நாடகம் என்னும் முப்பிரிவுகளை கொண்டது. பண்டைய தமிழர்கள் முதற்சங்கம், இடைச்சங்கம், கடைசங்கம் வைத்து தமிழ் வளர்த்தனர். இதன் மூலம் பல தமிழ் நூல்கள் நமக்கு கிடைத்தன.

இன்று பல்கலைக்கழகங்களும், ஆதினங்களும். தமிழ் மன்றங்களும் தமிழ் மொழியை பேணுவதில் அக்கறை காட்டி வருகின்றன.

பாரதி காலத்திலிருந்து இன்று மொழி வளர்ச்சியில் எத்தனையோ முன்னேற்றங்கள் ஏற்பட்டு இருக்கின்றன. தமிழ் பத்திரிக்கைகள் அதிகமான அளவில் மாத இதழ்கள் வார இதழ்கள் நாளிதழ்கள் அவைகளின் பதிப்புகளும் விற்பனைகளும் அதிகரித்து வருகின்றன. எழுத்தாளர்கள், கவிஞர்ககள் எண்ணிக்கை அதிகரித்துள்ளன. தமிழ் உரைநடை வளர்ச்சி விரிவடைந்துள்ளன. தமிழுக்கென தனி பல்கலைக்கழகம் உள்ளது. இவையெல்லாம் நன்கு பணியாற்றி வருகிறது.

தமிழகத்தில் கீழடியில் மேற்கொள்ளப்பட்ட அகல்வாய்வின் முடிவுகள் சமீபத்தில் வெளியிடப்பட்டன. தமிழின் தொன்மையை பல நூற்றாண்டுகள் பின்னோக்கி எடுத்துச் சென்ற இந்த ஆய்வு முடிவுகள் குறித்த பேச்சு இன்றைய தமிழகத்தில் அனைத்து தளங்களையும் ஆக்கிரமித்தன.

தமிழின் பழங்காலம் குறித்த தகவல்கள் எந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததோ அதே அளவுக்கு எதிர்காலத்தில் தமிழ் மொழியின் இருப்பு பயன்பாடு வளர்ச்சி பரிமாண மாற்றங்கள் குறித்து முன்கூட்டியே திட்டமிட்டு செயலாற்றுவது முக்கியம் என்ற கருத்து முன் வைக்கப்படுகிறது.

தமிழ் வளர்ச்சிக்காக பாடுபடுபவர்களுக்கு ஆண்டு தோறும் விருதுகள் தரப்படுகின்றது. இது தமிழக அரசு விருதாகும். ஆண்டுதோறும் திருக்குறள் நெறிபரப்பும் பெருந்தகையர் ஒருவரைத் தெரிவு செய்து திருவள்ளுவர் விருது வழங்கப்படுகிறது. இதற்கு விருது தொகையாக ஒரு இலட்சம் ஒரு சவரன் தங்கபதக்கம் வழங்கப்படுகிறது.

இதுபோன்று திருவிக விருது, பாரதியார் விருது, கி. ஆ.பே விஸ்வநாதம் விருது, பாரதியார் விருது போன்ற விருதுகள் தமிழ் அறிஞர்களை ஊக்கப்படுத்தும் வகையில் அளிக்கப்படுகிறது.



முனைவர்
ஜெ.ரஞ்சனி
உதவி பேராசிரியர்,
தமிழ்த்துறை,
திருச்சி

பண்பாடு தெரியாத நிலைக்கு இன்று இளைஞர்கள் இருக்கிறார்கள். நம் வீட்டில் இருக்கின்ற பெரியவர்களின் பெருமை தெரியாத நிலையில் அவர்களை புறக்கணிப்பது போல நம் நாட்டில் இருக்கின்ற மொழியின் பெருமையை அலட்சியம் செய்கின்றார்கள்.

தமிழில் பேசினால் கௌரவக் குறைச்சல் என்றும் நுனி நாக்கு ஆங்கிலம் தான் வளர்ச்சிக்கு வழி வகுக்கும் என்பது ஆழமாகப் பதியப்பட்டு வருகிறது. தமிழில் படிப்பதாலோ, பேசுவதாலோ என்ன வளர்ந்து விடப்போகிறது என்ற எண்ணத்தில் தான் இன்றைய இளைஞர்கள் இருக்கிறார்கள். பெற்றோர்களும் பிள்ளைகளுக்கு தமிழ் மொழிப் பற்றை கற்று தருவதில்லை தனியார் பள்ளிகளில் பிள்ளைகள் ஆங்கிலத்தில் தான் பேச வேண்டும் என்ற விதி முறைகள் இருந்து வருகின்றன. காசை கொட்டி தனியார் பள்ளிகளில் படிக்க வைக்கும் பெற்றோர்கள் அந்த பணத்தை தன் பிள்ளைகள் வெளி நாட்டில் வேலை பார்த்து இல்லை சொந்த ஊரிலோ பணம் சம்பாதிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். பேச்சு வழக்கில் கூட இன்று தமிழ் ஆங்கிலம் கலந்துதான் பேசுகின்றார்கள். தமிழ்நாட்டில் உள்ள ஏராளமான கடைகளில் ஆங்கிலப் பெயரை வைக்கின்றார்கள்.

வேற்று நாட்டை சார்ந்தவர்களுக்கு மொழி பற்று இருக்கின்றது. பல நாடுகளில் தமிழ் மொழி ஆட்சி மொழியாக இருக்கின்றது.

தமிழ் மொழியின் அவசியத்தை இன்றைய இளைஞர்கள் உணர வேண்டும்.15 மொழிகள் கற்றுத் தேர்ந்த பாரதி

> ''யாமறிந்த மொழிகளிலே
> தமிழ் மொழியைப் போல்
> இனிதாவது எங்கும் காணோம்''

என்று குறிப்பிட்டார்.

தாய்மொழிதான் சிந்திக்கும் திறனின் திறவு கோலாக இருக்கிறது. எந்த மொழியைக் கற்றாலும் எத்தனை மொழிகளை கற்றாலும் ஒருவரின் சிந்தனை உருவெடுப்பது தாய் மொழியில் தான்.

கையொப்பம் சிலர் தமிழில் இடுவதில்லை ஆங்கிலத்தில் பழகிவிட்டது மாற்ற முடியவில்லை என்கிறார்கள்.

உறவுகளை அழைக்கும்போது மம்மி, டாடி, அங்கிள் என்றுதான் அழைக்கிறார்கள். முன்னோர்கள் சொல்லிய உறவு பெயர்களை வைத்து கூப்பிட சிறு வயதிலிருந்தே குழந்தைக்கு பழக்க வேண்டும்.

குழந்தைகள் பெரியவர்கள் போடும் பனியன்களில் தமிழ் வாசகங்கள் இருப்பதை தேர்ந்தெடுக்காமல் ஆங்கிலத்தில் எழுதியுள்ள வாசகங்களை இன்றைய இளைஞர்கள் தேர்ந்தெடுக்கிறார்கள்.

இன்றைய இளைய தலைமுறையினரிடம் தமிழ் பேசும் வழக்கம், தமிழ் படிக்கும் வழக்கமும் தமிழ்நாட்டில் வெகுவாக குறைந்துள்ளது.

தமிழ் மொழியை நம் குழந்தைகளுக்கு சிறப்பாக கற்று கொடுக்கும் கடமை பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் உண்டு. குழந்தை பருவத்திலேயே மொழி பாடங்களை கற்கும் போதுதான் அவர்கள் அம்மொழியில் வல்லவர்களாகவும் மொழி பற்றாளராகவும் உருவாக முடியும் என்பதில் ஐயமில்லை.




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# 'என்ன வீட்டில் ஏதாவது நல்ல செய்தி உண்டா?"

திருமணமான சில மாதங்களிலிருந்தே பல ஜோடிகளைத் துரத்த ஆரம்பிக்கும் கேள்வி இது ! இப்போதைக்கு குழந்தை வேண்டாமென கவலையின்றி அந்த ஜோடி இருந்தாலும்கூட, ''அவர்கள் சந்தோசமாக இல்லை'' என்றே மொழி பெயர்த்துக் கொள்ளும் இந்த சமூகம் . சிறுவயதுமுதல் பெண்கள் கேட்கும் ஒப்பீடுகள் எல்லாமுமே ஒன்றுமேயில்லை என்றாகிவிடும் ஒரு ஒப்பீடு உண்டென்றால் அது குழந்தையின்மை அல்லது குழந்தைபிறப்பு தள்ளிப்போகிறது எனும்போது உருவாக்குகின்ற ஒப்பீடுதான். அதனால் ஏற்படும் peer pressure / social pressure என்பது வார்த்தைகளால் சொல்லிமாளாதது என்பது அனுபவிப்போர்க்கு மட்டுமே புரியக்கூடியது.

திருமணமாகி மூன்று தொடக்கம் ஆறு மாதங்கள்வரை பொறுத்திருக்கும் பெற்றோர் , உற்றார் உறவினர்கள் என எல்லோருமே சுமார் ஒருவருடம் கழிந்ததும் ''நல்ல செய்தி சொல்லவில்லை'' என்றால் மெதுவாக ஆரம்பிப்பார்கள். நம் பெற்றோர்களே ''எப்போ நல்ல செய்தி சொல்லப்போறே?, பார் உன் சினேகிதியை உனக்கப்புறம் திருமணமாகி இப்போ முழுகாம இருக்கிறாளாம்'' என ஆரம்பிப்பதுண்டு. அப்போது ஆரம்பிக்கும் ஒருவித டென்க்ஷன்! இதுபோன்ற கேள்விகளெல்லாம் முதலில் பெண்களை குறிவைத்தே எய்யப்படும். யாரும் ஆண்களை இப்படிக்கு கேற்பது அரிது . ''நமக்கு ஏதோ பிரச்சினையோ அதனால்தான் கரு உருவாவதில்லையோ'' என மெதுவாக ஒரு பயம் பெண்களிடம் எட்டிப்பார்க்க ஆரம்பிக்கும் . இதுவே முதல் குழந்தையின்மை சமூக அழுத்தம். பின்னர் இன்னும் ஆறு மாதங்கள் முயற்சித்தும் ஒன்றும் நடக்கவில்லையெனில் உடனே ''கோவிலுக்கு நேர்த்தி வையுங்கள்'' என ஆரம்பிப்பார்கள் சொந்தங்கள். போதாக்குறைக்கு இவையெல்லாம் சக்திவாய்ந்த தெய்வங்கள் , கோவில்கள் என தம் பங்கிற்கு நேர்த்திக்கடன் வைக்க பல கோவில்களையும் தெய்வங்களையும் சேர்த்தே சிபாரிசு செய்வார்கள். இன்னும் பிரஷர் அதிகமாகும். இரண்டு வருடங்கள் கழிந்துவிட்டது இன்னும் குழந்தையில்லை என்றால் அடுத்து ட்ரீட்மெண்ட் என ஆரம்பிப்பார்கள்.

''ட்ரீட்மெண்ட்''! ஆம், இது போன்ற ஓர் ட்ரெஸ் பெண்களுக்கு வேறெதுவுமில்லை. IUI , IVF என்று எடுக்கும் ஒவ்வொன்றும் குழந்தை பிறக்கும் என்ற நம்பிக்கையையும் தாண்டி, இதிலாவது பலன் கிடைக்குமா? இல்லை இதிலும் தோல்விதானா என்ற உளைச்சல் மனதளவிலும்



பிரியா இராமநாதன்
(இலங்கை)

உடலளவிலும் அவ்வளவு ஸ்ட்ரெஸ் கொடுக்கக்கூடியதாம்.

இன்றைய காலகட்டத்தில் ஒருவர் விடயத்தில் மற்றொருவர் அவ்வளவாய்த் தலையிடுவதில்லை, இதனடிப்படையில் திருமண வாழ்க்கை என்பது அவரவர் தனிப்பட்ட விடையம் என்றபோதிலும் ஒரு குழந்தைகூட இல்லாத திருமணவாழ்க்கையினை வெற்றிகரமான வாழ்க்கையாக நம் சமூகம் அங்கீகரித்துக்கொள்கிறதா? குழந்தையில்லாத பெண்கள் மங்கள நிகழ்வில் கலந்துகொள்வது தடையாக இருந்த காலம் மெல்ல மாறியிருக்கிறது என்றாலும், இன்றும்கூட அவர்களை நாசுக்காக தவிர்க்கும் அல்லது அவர்களுக்கு பின்னால் பேசும் புறம்பேச்சுக்கள் முற்றாக ஒழிந்துவிடவில்லை என்பதுதான் யதார்த்தம் . உடலில் எந்தக்குறைபாடும் இல்லாதபோதிலும் இதுபோன்ற ஸ்ட்ரெஸ்களே பல நேரங்களில் குறித்த பெண்களுக்கு எதிரியாக அமைந்துவிடும் .

குழந்தை வேண்டும் என்ற இந்த ஆர்வத்தினை, பதற்றத்தினை வேதனையை மருத்துவத்துறையில் உள்ள சிலர் காசாக்கிப் பார்க்கும் சம்பவங்கள் இன்று பல மடங்காக அதிகரித்துவருகிறது என்றால் மிகையில்லை. தம்பதியரின் குறையை மிக அழகாகவும், புத்திசாலித்தனமாகவும், வியாபாரமாக்கிக்கொண்டிருக்கிறார்கள் இன்றைய பல மருத்துவ வியாபாரிகள். நீங்கள் கேபிள் டிவி பாவனையாளர்களா? அப்படியாயின் ஒருநாளையில் எத்தனை அலைவரிசைகளில் எத்தனை தடவைகள் இந்த குழந்தையின்மை பற்றியும், அதற்கான சிகிச்சைகள் பற்றியும் கருத்தரிப்பு மையங்களை, சிகிச்சை நிலையங்களை நடத்திவரும் மருத்துவர்கள் தங்களை பற்றியும், தங்கள் மருத்துவமனைகள் பற்றியும் கூச்சமேயின்றி விளம்பரப்படுத்திக்கொள்கிறார்கள் என்பதனை அவதானித்ததுண்டா? இந்திய அலைவரிசை களில்தான் இதுபோன்ற விளம்பரங்கள் அதிகம். எந்த அலைவரிசையை திருப்பினாலும் யாராவது ஒரு கைராசிக்கார [?!] டொக்டர் வந்து பேசிக்கொண்டிருப்பார் . இதில் நாம் நூதனமாக அவதானிக்க வேண்டிய ஒன்று என்னவென்றால் இப்போதெல்லாம் மக்களுக்கு விழிப்புணர்வூட்ட வேண்டிய மருத்துவம் குறித்த நிகழ்ச்சிகளெல்லாம் அநேகமாக

26 ஆம் பக்கம் பார்க்க...






விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# அம்மாவின் கவிதைகள்-01

கவிதா லட்சுமி (நோர்வே)

முதல்முறை எமது
பிரிவு நிகழ்ந்தபோது
கருவறையிலிருந்து நீ
பிரசவித்துக்கொண்டிருந்தாய்

என் மார்போடு தூங்கிய நீ
புறமுதுகு காட்டித்
திரும்பிக் கொண்ட
அந்த இரவின் தீப்பொறி போல்
பிரிவு நிகழ்தலின்
மனச்சலனம் தாக்கிய வடுக்கள்
முதல்முறை என்னுள்
நுழைந்தது கண்ணே!

என் விரலினூடு நடந்த நீ
கைகளை உதறிக்கொண்டு
உலகை
தனியாக அளக்கத்



தொடங்கிய அதிர்வும்
துளிர்க்கும் கண்களோடு
விடைபெறும் நீ
அன்று திரும்பிப்பாராமல்
ஓடிய நிமிடம்
என்மீது எறியப்பட்ட திகைப்பும்

கண்ணாடிச் சாரளத்தனூடு
தொடரும் உன் கையசைவுகள்
காணாமல்ப்போன நொடி
துப்பிய சலனமும்

தினமும்
நீ கேட்கும் முத்தம்
உனக்கு மறந்துபோன
அந்நாளின் சடலம்
என் மீது வீழ்த்திய பாரமும்

உணர்த்தியது..
பிரசவத்தின் வலி
எத்தனை சிறியது!
இப்படித்தான்

முதல்முறை எமது பிரிவு
நிகழ்ந்தபோது...

என் கருவறையிலிருந்து நீ
பிரசவித்துக்கொண்டிருந்தாய்
மகனே!



# நினைவுகளின் தனியறை!

சிறு பொறியில்
வெந்து தணியும் காடென
தொலைவினை
அருகாக்கும்
ஆற்றலின் அசைவென
தகித்துக் கடக்கிறது
நினைவுகளின் வாழ்வு

ஒருபோது
பரணில் கட்டிவைப்பதும்
பிறிதொருபோது
முடிச்சுகளின் கட்டவிழ்ப்பு
மாய் நிகழ்கிறது
நினைவுகளின் கலை

மீண்டும் மீண்டும்
உச்சரிக்க
ஆயுள் நீண்டு
சக்தி பெறுகின்றன
நினைவுகளின் சொற்கள்

அரமவற்ற வெளிகளில்
உரத்த குரலிலும்
இருள் கவிந்த இரவுகளில்
மவுனங்களிலும்
உயிர் வாழ்கின்றன
நினைவுகளின் பாடல்

காதலோடு வருடி
கருணையோடு
அரவணைத்து
ஏக்கத்துளன்று
உன்மத்தம்
கொள்ளவைக்கின்றன
நினைவுகளின் வாசம்

நினைவுகளுக்கெனத்
தனியறை ஒன்றுண்டு
அது பூட்டப்பட்டிருக்கிறது
மனதினாழத்தில் அதன்
திறப்பு

அந்த அறையை எப்பொ
ழுது திறப்பது
எப்பொழுது மூடுவதென்ற
சூட்சுமத்தையும்
தருணங்களையும்
ஆழ்மனம் மட்டுமே
அறிந்திருக்கிறது.

ரூபன் சிவராஜா
(நோர்வே)



விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

> ''மூச்சுத் திணறுதாம்.
> ஒரு பிள்ளையை அவசரமாகப்
> பார்க்க வேணுமாம்.''

ஒரு நோயாளியை பார்த்துக்கொண்டிருந்த நான் நிமிர்ந்து பார்த்தேன். இடைமறித்தது எனது உதவித் தாதிதான்.

வேலையைக் குழப்பினாள் என்று கோபிக்க முடியாது. அவசர நோயாளிக்கு முன்னுரிமை கொடுத்தே ஆக வேண்டும்.



# மூச்சுத் திணறலுக்கு மருந்தில்லாத சிகிச்சை

Dr.IN

அவசர நோயாளிகளை பார்வையிடும் அடுத்த அறைக்குள் நுளைந்த போது அழகிய பொம்மை ஒன்று பாடசாலை வெள்ளைச் சீருடையில் மூச்சு விடத் திணறிக் கொண்டிருந்தது. சுவாசிக்கும் வேகம் அதிகமாக இருந்தது.

வேர்வை ஆறாகப் பெருகி ஓடியது. கழுவிய முகத்தின் ஈரத்தைத் துடைக்காதது போல வழிந்தோடியது. வெள்ளை சீருடையானது தோய்த்து உலராத ஆடை போல ஈரலிப்பாக இருந்து. சற்று அதிக நேரமாகவே இவ்வாறு மூச்சுவிட சிரமப்பட்டிருப்பாள் என்பதற்கு அவைபோதுமான சாட்சிகள் அல்லவா? பக்கத்தில் தந்தை செய்வதறியாது அந்தரப்பட்டுக் கொண்டிருந்தார். பாடசாலையில் இருக்கும்போது இவளுக்கு திடீரென இவ்வாறு மூச்சுத் திணறல் ஏற்பட்டதால், அதிபர் தனக்குப் போன் பண்ணியதாகவும், தான் உடனடியாகவே பிள்ளையை இங்கு அழைத்து வந்ததாகத் தெரிவித்தார் தந்தை. பார்க்கப் பரிதாபமாக இருந்தாள்.

பார்த்த உடனேயே ஆபத்தான நிலை அல்ல என்பது தெரிந்தது. அது ஆஸ்த்மா வும் இல்லை, இருதய வழுவல் நோயுமல்ல என்பது புரிந்து விட்டது. இருந்தபோதும் அவளது பிரஸர் இருதயத் துடிப்பு, சுவாச நிலை ஆகியவற்றை அவசரமாக பரிசோதித்து அவளது நோயை நிர்ணயம் செய்து முடித்தேன்.

''இவவுக்கு மருந்துகள் ஒன்றும் தேவையில்லை'' என்று நான் சொன்னதும் தந்தையின் முகம் துணுக்குற்றது. போனமுறை இவவுக்கு இப்படி வந்தபோது பிரைவேட் ஆஸ்பத்திரிக்கு கொண்டு போனனாங்கள்.

''அவையள் உடனடியாக அவசரப் பிரிவில் நிற்பாட்டி ஊசியும் போட்டு காஸ்சும் பிடித்தவை''. காஸ் என அவர் கூறியது ஆஸ்த்மாவிற்கான மருந்தை ஆவியாகப் பிடிப்பது– நெபுலைஸ் (Nebulize)– செய்வது என்பதை புரிந்து கொண்டேன்.

''மருந்து தேவை இல்லை என்று சொன்னது சிகிச்சை தேவையில்லை என அர்த்தப்படாது. ஒரு பயிற்சி செய்தால் எல்லாம் சுகமாகும்'' என்றேன்.

''இந்தளவு மூச்சு எடுக்க சிரமப்படுபவளுக்கு பயிற்சியா?''.... டொக்டருக்கு மூளை கெட்டுப் போச்சா?''

அவரது முகத்தில் ஆச்சரியத்தின் ரேகைகள். இருந்தாலும் கேட்கவில்லை. ''பிள்ளை கவனமாகக் கேட்டு நான் சொல்லிறதைச் செய்யுங்கோ. வலது மூக்கை அழுத்திப் பிடித்துக் கொண்டு இடது மூக்கால் ஆழமாகச் சுவாசியுங்கோ. ஐந்து தரம் அவ்வாறு செய்யுங்கோ''.

அவள் சொன்னதை சரியாகச் செய்தாள். நான் ஊசி போடவில்லை என்பதால் அவளது முகத்தில் ஒரு மகிழ்ச்சி பரவியதாக உணர்ந்தேன். ஐந்து தடவைகள் முடிய அவளது சுவாசத்தில் முன்னேற்றம் ஏற்படுவது தெரிந்தது.

இனி இடது மூக்கை அழுத்திப் பிடித்துக் கொண்டு வலது மூக்கால் ஆழமாகச் சுவாசியுங்கோ. முன்னரைப் போல 5 தடவைகள் என்றேன். நம்பிக்கையோடு செய்தாள்.

''கொஞ்சம் சுகமாக இருக்கோ'' பிள்ளையைக் கேட்டேன். ஓம் என்று சொல்லுமாப் போல மேலும் கீழுமாக தலையாட்டினாள். மேலும் இரண்டு மூன்று தடவைகள் செய்ய அவளது மூச்சுத் திணறல் முற்றாக நின்றுவிட்டது.


இது என்ன யோகசனத்தில் செய்யிற சுவாசப் பயிற்ச்சி போல கிடக்கே என்று நீங்கள் கேட்டால் நான் அதை மறுக்க மாட்டேன். **எங்கிருந்து வந்தாலும் அது நன்மையாக இருந்தால் அதை மருத்துவத்தில் பயன்படுத்துவதில் பிழை இல்லை.** நானும் முறையாக யோகாசனப் பயிற்சிகளைக் கற்றிருக்கிறேன். இரத்தினசோதி மாஸ்டரிடம் யோசனப் பயிற்சிகளை சிவன் கோவில் மண்டபத்தில் பயின்ற நினைவுகள் வந்தன. அவருக்கு என் நன்றிகள்.

உண்மையில் அவளது நோய் என்ன எதற்காக இந்த சிகிச்சையை நான் தேர்ந்தெடுத்தேன் என்று நிச்சயம் கேட்பீர்கள். மருத்துவத்தில் Hyperventilation என்று சொல்வார்கள். மிகை சுவாசம் என்று சொல்லலாம். இது ஏற்படுவதற்கு பல காரணங்களைச் சொல்லலாம். குறைந்தது 15 மருத்துவ காரணங்களாவது இருக்கும்.

Respiratory, alkalosis, Diabetic Ketoacidosis, Heart failure, Pulmonary embolism, Sepsis, Pneumonia போன்ற ஆபத்தான காரணிகளை அடுக்கிக் கொண்டே போகலாம். பயப்பிராந்தி [Panic disorder] உளநெருக்கீடு [Stress] மனப் பதற்றம் [Anxiety] போன்ற உளம் சார்ந்த காரணிகளும் உள்ளன.

இவளது மூச்சுத் திணறல் உளவியல் ரீதியானதே ஒழிய ஆபத்தான நோய்களால் வந்தது அல்ல என்பதை எந்த மருத்துவராலும் சுலபமாக கண்டறிய முடியும். வகுப்பில் எப்பொழுதுமே முதற் பிள்ளையாக இருக்கும் இவளுக்கு என்ன உளவியல் தாக்கம் என்பதை என்னால் உடனடியாகக் கண்டறிய முடியவில்லை.

தந்தையாலும் காரணத்தை கண்டறிய உதவ முடியவில்லை. இருந்தாலும், போட்டி மனப்பான்மை, அடுத்தவள் தன்னை முந்திவிடுவாளோ என்ற அச்சம், படிப்பதில் உள்ள நெருக்குவாரம் போன்ற பலவும் காரணமாகலாம். அவளுக்கு தீவிர மருந்துகள் எதுவும் தேவைப்படாது. உள ஆற்றுப்படுத்தல் முறைகள் நல்ல பலன் கொடுக்கும். அதன் முதற்படியாகத்தான் இந்த மூச்சுப் பயிற்சி அவளுக்கு மூச்சுப் பயிற்சியோடு யோகாசனம், சாந்தியாசனம் போன்றவற்றையும் பழக்கும்படி ஆலோசனை வழங்கினேன்.



டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்







விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.


INNENSTADT WEST
ortel MOBILE
DORTMUND
மாநகரில்
தமிழர் தெருவிழா
2021
புகழ் பெற்ற பல கலைஞர்கள் சங்கமிக்கும் மாபெரும்
ஆடல் பாடல் கொண்டாட்டம்....
Strassenfest der Tamilen
04 | 05
SEP 21
Sa. 11.00 Uhr bis 22.00 Uhr
So. 12.00 Uhr bis 18.00 Uhr
தமிழர் அரங்கம்
Verein für tamilische Künstler e.V
VMDO
Der Verbund der sozial-kulturellen Migrantenvereine in Dortmund e.V
TKD
comdu.it Deutschland
ஊடகஅனுசரணை
வெற்றிமணி
அகரம்
IBC தமிழ்
GTV
தமிழ் MTV
STS தமிழ் TV
Lankasri
ETR
மேலதிக விபரங்களுக்கு 0151 633 633 33



# எனது நாடக அனுபவங்கள் 09

ஆனந்தராணி பாலேந்திரா (UK)

# ‘கண்ணாடி வார்ப்புகள்’

கடந்த இதழில் ‘கண்ணாடி வார்ப்புகள்’ நாடகக் கதைச் சுருக்கமும், அதன் முதல் மேடையேற்றம் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் 09-06-1978 அன்று நிகழ்ந்தது பற்றியும் எழுதியிருந்தேன்.

‘கண்ணாடி வார்ப்புகள்’ நாடகம் ஒரு மொழிபெயர்ப்பு நாடகமாக இருந்தபோதும்கூட எமது வாழ்வியலுக்குப் பொருத்தமான கதையாக இருந்தபடியால் அனைவரையும் கவர்ந்தது. பலர் நாடகப் பாத்திரங்களுடன் தம்மை இனங்கண்டதாகக் கூறினார்கள். பாலேந்திராவின் நெறியாள்கை பற்றியும் எல்லோரது நடிப்புப்பற்றியும் வெகுவாகப் பாராட்டினார்கள். நல்ல விமர்சனங்களும் பத்திரிகைகளில் வெளிவந்தன. முதல் மேடையேற்றத்திற்குப் பாவித்த அந்த நாடகப்பிரதியை இன்றும் பத்திரமாக வைத்திருக்கிறோம்.

பாலேந்திரா நாடகத்திற்கான ஒளியமைப்பைச் செய்வதிலும் திறமைசாலி. உணர்வுச் சூழலுக்கு அமைந்த ஒளியமைப்பை இந்த நாடகத்திலும் செய்திருந்தார். இந்த நாடகத்தின் ஒளியமைப்பு பற்றியும் வெகுவாகப் பேசப்பட்டது. தாய் தன் பழைய நினைவுகளை மீட்கும் காட்சியில் முதன்முறையாக Mirror Ball அறிமுகப்படுத்தப்பட்டது. மேடையின் ஓரத்தில் அடுத்த காட்சியில் நடிப்பதற்காக நின்றிருந்த எனக்கு அந்த ஒளிக்காட்சி பிரமிப்பாக இருந்தது. ஒரு கனவுலகில் மிதப்பது போல் இருந்தது.

‘கண்ணாடி வார்ப்புகள்’ நாடகம் இலங்கையில் ஜூன் 78இல் இருந்து ஏப்ரல் 81 வரை யாழ்ப்பாணம், கொழும்பு, பேராதனை ஆகிய இடங்களில் 13 தடவைகள் மேடையேற்றப்பட்டது. பாலேந்திராவின் ஊரான அரியாலையில் ஏப்ரல் 81ல் சுதேசிய திருநாள் விழாவில் திறந்தவெளி அரங்கில் இந்த நாடகம் மேடையேற்றப்பட்டபோது இடைவேளையின் போது உடை மாற்றுவதற்காக அரங்கிற்கு அருகில் இருந்த ஒரு வீட்டிற்கு என்னையும் நிர்மலாவையும் காரில் அழைத்துச் சென்றது இப்போதும் ஞாபகமாக உள்ளது.

தொடர்ந்த நாடக மேடையேற்றங்களே தீவிர நாடக இயக்கத்தை வலுப்படுத்தும் என்பதில் பாலேந்திராவிற்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது. இதனால் 1978இல் ‘கண்ணாடி வார்ப்புகள்’ நாடக மேடையேற்றத்தைத் தொடர்ந்து ஒரு ரசிகர் அவையை உருவாக்கி அடுத்தடுத்து நாடகங்களை மேடையேற்றும் நோக்கத்துடன் அவைக்காற்று கலைக் கழகத்தை ஆரம்பித்தார். இதன் ஸ்தாபக உறுப்பினர்களில் நானும் ஒருவர். பின்னர் 1982இல் நானும் பாலேந்திராவும் திருமணம் செய்து இலங்கையை விட்டு வெளியேறிய பின்னர் லண்டனைத் தளமாகக் கொண்டு தமிழ் அவைக்காற்று கலைக் கழகத்தை நாம் தொடர்ந்து நடத்தி வருகிறோம்.

‘கண்ணாடி வார்ப்புகள்’ நாடகம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் வானொலி நாடகமாக ஒலிப்பதிவு செய்யப்பட்டு 23-09-1979ல் ஒலிபரப்பானது. இதனை அப்போது இலங்கை வானொலியில் நாடகத் தயாரிப்பாளராகவும் செய்தி வாசிப்பாளராகவும் இருந்த பி.விக்னேஸ்வரன் தயாரித்தார். பாலேந்திரா வானொலிக்காக பிரதியை ஒரு மணித்தியாலமாகச் சுருக்கியிருந்தார். மேடையில் நடித்த நாம் நால்வருமே வானொலியிலும் நடித்தோம். நேயர்களின் வரவேற்பைப் பெற்ற நாடகமாக இது அமைந்தது. ‘கண்ணாடி வார்ப்புகள்’ நாடகம் இலங்கை வானொலியில் நான்கு தடவைகள் மீள் ஒலிபரப்பாகியது.

இலங்கை தேசிய தொலைக்காட்சியான ரூபவாகினி 1982ஆம் ஆண்டு தனது ஒளிபரப்பை ஆரம்பித்தபோது ‘கண்ணாடி வார்ப்புகள்’ நாடகம் முதலாவது தமிழ் நாடகமாக 18-03-1982ல் ஒளிபரப்பாகி தொலைக்காட்சி வரலாற்றில் இடம் பிடித்துக்கொண்டது. மிகுந்த வரவேற்பைப் பெற்ற நாடகமாகப் புகழ் பெற்றது. இலங்கை வானொலிக்காக இந்த நாடகத்தைத் தயாரித்த



பி.விக்னேஸ்வரனே தொலைக்காட்சிக்காகவும் இதனைத் தயாரித்தார். அப்போது அவர் ரூபவாகினியில் நிறைவேற்றுத் தயாரிப்பாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார்.

1981ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் ‘கண்ணாடி வார்ப்புகள்’ நாடக ஒளிப்பதிவு ரூபவாகினி கலையகத்தில் நடைபெற்றது. முதல் முதலாக இங்கு ஒளிப்பதிவு செய்யப்பட்ட நாடகம் இதுவாகும். சிங்கள நாடகங்கள்கூட இதற்கு முன்னர் அங்கு ஒளிப்பதிவு செய்யப்படவில்லை. இந்தப் பெருமையையும் ‘கண்ணாடி வார்ப்புகள்’ நாடகம் பெற்றுக்கொண்டது. அங்கிருந்த அனைவருக்குமே இது புது அனுபவம். எல்லோருமே மிக பரபரப்பாக இயங்கினார்கள். நான் ஏற்கனவே ‘கோமாளிகள்’, ‘வாடைக்காற்று’ ஆகிய இலங்கைத் தமிழ் திரைப்படங்களில் நடித்திருந்தாலும் தொலைக்காட்சிப் படப்பிடிப்பு எனக்கும் புதிதாகத்தான் இருந்தது. நாம் மேடையில் எப்படி நடித்தோமோ அப்படியே நடித்தோம். மூன்று நான்கு கமராக்கள் வைத்து படப்பிடிப்பு நடந்தது. நள்ளிரவு தாண்டியும் படப்பிடிப்பு தொடர்ந்தது. மிக நீண்ட நேரம் குளிரூட்டப்பட்ட கலையகத்தில் இருந்ததால் எனக்கு மூக்கடைத்து தடிமன் போல் வந்ததும் இப்போது ஞாபகம் வருகிறது.

‘கண்ணாடி வார்ப்புகள்’ நாடகம் ரூபவாகினி தொலைக்காட்சியில் 1982 மார்ச் மாதம் ஒளிபரப்பப்பட்டபோது நான் யாழ்ப்பாணத்தில் வட்டுக்கோட்டையில் அமைந்திருக்கும் யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தேன். அப்போது அதிபராக இருந்த ராஜன் கதிர்காமர் அவர்கள் இந்த நாடகத்தை எல்லோரும் பார்ப்பதற்காக ஒரு பெரிய தொலைக்காட்சிப் பெட்டியை பாடசாலை மண்டபத்தில் ஏற்பாடு செய்தார். பெரும்பாலும் வீடுகளில் தொலைக்காட்சிப் பெட்டிகள் இல்லாத காலம் அது. விடுதி மாணவர்கள், ஆசிரியர்கள், பாடசாலை சுற்றுவட்டத்தில் வசித்த மாணவர்கள், பெற்றோர்கள் என மண்டபம் நிறைய வந்திருந்து பார்த்தார்கள். நானும் இவர்களுடன் சேர்ந்திருந்து நாடகம் பார்த்தது மறக்கமுடியாத ஒரு அனுபவம்.

நான் லண்டனுக்கு புலம்பெயர்ந்த பின்னர் ‘கண்ணாடி வார்ப்புகள்’ நாடகத்தை பாலேந்திரா மீள் தயாரிப்பாக இங்கே தயாரித்தார். இலங்கையில் மகளாக நடித்த நான் லண்டன் தயாரிப்பின்போது தாய் பாத்திரத்தில் நடித்தேன். ஏற்கனவே இந்த நாடகம் எனக்கு நல்ல பரிச்சயமாக இருந்தபடியால் தாய் பாத்திரத்தில் நடிப்பது எனக்குக் கஷ்டமாக இருக்கவில்லை. லண்டன் தயாரிப்பில் என்னோடு மகளாக தர்ஷினி கணேசபிள்ளை [சிவசுதன்], மகனாக வாசுதேவன், விருந்தாளியாக சிவசுதன் ஆகியோர் நடித்தனர். என்னைத்தவிர மற்றவர்கள் இந்த நாடகத்திற்குப் புதியவர்கள் என்பதால் நீண்ட ஒத்திகைகள் நடந்தன.

மிகுதி அடுத்த இதழில்...

எமது அடுத்த கப்பல் 2021 July மாதம் கடைசியில் செல்ல இருப்பதால் தயவு செய்து உங்கள் பொதிகளை
எமது RAJU PARCEL SERVICE ஏஜென்டிடம் July 25 ற்கு முதல் ஒப்படைக்கவும்




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# இந்தியா என்ன செய்யப்போகின்றது?

03 ஆம் பக்கத் தொடர்ச்சி...

இந்தியாவின் ஏ.என்.ஐ. செய்திச் சேவைக்கு அளித்துள்ள நேர்காணல் ஒன்றில் இதனைத் தெரிவித்த அவர், ‘‘இந்தியக் கடற்படை நாட்டின் கடல் எல்லைகளைப் பாதுகாப்பதற்கு மிகவும் தயார் நிலையில் உள்ளது. அதனால், யாரும் எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கும் வகையில் எதனையும் செய்துவிட முடியாது’’ எனவும் தெரிவித்தார்.

இலங்கையில் அதிகரித்துவரும் சீனாவின் பிரசன்னம் குறித்து அண்மைக்காலம் வரையில் வெளிப்படையாகப் பேசுவதைத் தவிர்த்துவந்த இந்தியா முதல் தடவையாக இந்தக் கருத்தை முன்வைத்திருக்கின்றது. ‘‘கொழும்பு துறை நகர திட்டம் குறித்து எங்களின் சமீபத்தைய பாதுகாப்பு அடிப்படையில் விடயங்களை உன்னிப்பாக அவதானித்து வருகின்றோம்’’ எனவும் அரிண்டம் பக்ச்சி தெரிவித்துள்ளார்.

சீனாவின் பாரிய முதலீட்டுடன் கட்டியெழுப்பப்பட்டுள்ள கொழும்பு துறைமுக நகரத்தை நிர்வகிப்பதற்கான ஆணைக்குழு ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கின்றது. இதற்கான சட்டமூலம் சில வாரங்களுக்கு முன்னர் பலத்தை சர்ச்சைகளுக்கு மத்தியில் இலங்கைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இந்த ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் துறைமுக நகரத்தை தனியான ஒரு நாடாக சீனா நிர்வகிக்கப் போகின்றதா என்ற கேள்வியை எழுப்பியிருந்த நிலையில், இதன் மூலம் இந்தியாவின் கடல்சார் பாதுகாப்புக்கு இது அச்சுறுத்தலாக அமையலாம் என்பதும் உணர்த்தப்பட்டிருந்தது.

இலங்கையைக் கையாள்வதில் இந்தியா மிகவும் அவதானமாகவே இருக்கின்றது. சிங்கள மக்கள் மத்தியில் தமக்கு எதிரான கருத்துக்கள் உருவாக்கப்படலாம் என்பதால், ஒவ்வொரு வார்த்தைகளையும், செயற்பாடுகளையும் மிகவும் அவதானமாகவே இந்தியா மேற்கொள்கின்றது. கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்குவதற்கு கோட்டாபய அரசு இணங்கிய போது அதற்கு எதிரான போராட்டங்களை தென்னிலங்கையில் இலகுவாக முடுக்கிவிட முடிந்தது. துறைமுக தொழிற்சங்கங்கள், ஜே.வி.பி. என்பன இந்தப் போராட்டங்களை முன்னெடுத்து அந்த உடன்படிக்கையிலிருந்து இலங்கையைப் பின்வாங்கச் செய்தார்கள்.

இலங்கை விவகாரத்தை எவ்வாறு கையாள்வது என்பதில் இந்தியா திண்டாடுவதற்கு இதுபோன்ற காரணங்கள் உள்ளன. ஏற்கனவே கையைச் சுட்டுக்கொண்ட அனுபவம் இந்தியாவுக்குள்ளது. சிங்கள மக்களின் அதிருப்திக்கு மத்தியில் தம்மால் எதனையும் சாதிக்க முடியாது என்பதையும் அவர்கள் உணர்கின்றார்கள். இருந்தாலும், இப்படியே இருந்துவிட்டால், சீனாவால் வரக்கூடிய ஆபத்தை தவிர்க்க முடியாது போகலாம் என புதுடில்லிக்கு உணர்த்தப்பட்ட நிலையில் அதன் அணுகுமுறையில் சில மாற்றங்களை அவதானிக்க முடிகின்றது.

‘‘இந்து சமுத்திரத்தில் சீனா ஆழமாக கால்பதிப்பதால் இலங்கையுடனான உறவுகள் குறித்து இந்தியா மறுபரிசீலனை வருகிறது’’ என இந்தியாவின் பிரபல தினசரியான ‘‘தி பிரின்ட்’’ கடந்த வாரம் செய்தி வெளியிட்டிருந்தது கவனிக்கத்தக்கது. ராஜபக்ஷ அரசாங்கம் மீண்டும் அதிகாரத்துக்கு வந்த பின்னர் கொழும்புடனான இராஜதந்திர உறவுகளுக்குப் புத்துயிர் கொடுப்பதற்கு புதுடில்லி விரும்பியது. ஆனால், இந்தியாவை சமநிலையில் வைத்திருப்பதற்குப் பதிலாக ஒரேயடியாக சீனாவின் பக்கம் சாயும் இலங்கையின் நிலைப்பாடு இந்தியாவைத் தடுமாற வைத்திருக்கின்றது. கடந்த மாதம் இலங்கைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட கொழும்பு துறைமுகச் சட்டமூலம், இந்தியாவின் பிரதான



எதிரியை இந்தியாவின் கொல்லைப் புறத்துக்கே கொண்டுவந்திருக்கும் நிலையில், இனிமேலும் உறங்கிக் கொண்டிருக்க முடியாது என்ற உண்மையை புதுடில்லிக்குத் தெளிவாக உணர்த்தியிருக்கின்றது.

இந்திய பிரதமர் நரேந்திரமோடிக்கும் ராஜபக்ஷ சகோதாரர்களிற்கும் இடையிலான ஆரம்ப கால நட்புறவு தற்போது மறையத்தொடங்கியுள்ளது. இந்தியாவிற்கு முதலிடம் என்ற இலங்கையின் கொள்கை காணாமல்போயிருக்கின்றது. அந்த இடத்துக்கு சீனா வந்திருக்கின்றது. கடந்த காலங்களில் இந்தியா விட்ட சில தவறுகளும் இதற்குக் காரணம் என்பதையும் புதுடில்லியிலுள்ள கொள்கை வகுப்பாளர்கள் உணர்ந்துகொண்டிருக்கின்றார்கள். இந்தப் பின்னணியில்தான் இலங்கையை எவ்வாறு கையாள்வதுஎன்பதுகுறித்துபுதுடில்லிமீள் பரிசீலனை செய்வதாக த பிரின்ட் என்ற தினசரி செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை மீது இந்தியாவுக்கு இருந்த ஒரே பிடி 13 ஆவது திருத்தம்தான். இலங்கை – இந்திய உடன்படிக்கையின் பலனாகக் கொண்டுவரப்பட்ட 13 ஆவது திருத்தத்தின் மூலமாகத்தான் மாகாண சபைகள் அமைக்கப்பட்டன. 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என கொழும்பை வலியுறுத்திவந்த புதுடில்லி, ராஜபக்ஷ சகோதரர்களின் ஆட்சியில் அது சாத்தியமாகாது என்பதை உணர்ந்திருப்பதாகவே தெரிகின்றது.

மாகாண சபைகளை இல்லாதொழிப்பது இல்லையெனில், அதற்குள்ள அதிகாரங்களைக் கொஞ்சம் கொஞ்சமாக பிடுங்கி அதனை ஒரு வெற்றுக் கோதாக மாற்றிவிடுவது என்ற இலக்குடன்தான் ராஜபக்ஷக்களின் அரசாங்கம் சென்றுகொண்டிருக்கின்றது.மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்படாமல், ஆளுநர்களின் கீழ் அவை நிர்வகிக்கப்பட்டு இதற்கு அதிகளவு வாய்ப்பைக் கொடுக்கின்றது. அண்மையில் மாகாண சபைகளுக்கு கீழ் இருந்த வைத்தியசாலைகள் மத்திய அரசின் கீழ் கொண்டுவரப்பட்டமை இதற்கு ஒரு உதாரணம். இது போன்ற செயற்பாடுகளை தொடர்ச்சியாக எதிர்பார்க்கலாம்.

இந்த நிலையில், 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துங்கள் என்பதைக்கூட அழுத்தமாக கொழும்புக்குக் கூறக்கூடிய நிலையில் டில்லி இல்லை. இந்த நிலையில்தான் கடந்த வியாழக்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்தித்த இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பால்கே, ‘‘மாகாண சபைத் தேர்தல்களை விரைவாக நடத்துமாறு இலங்கை அரசை வலியுறுத்துங்கள்’’ என கூட்டமைப்புத் தலைமைக்கு ஆலோசனை வழங்கியிருக்கின்றார். வழமையாக கூட்டமைப்புத் தலைமைதான் இவ்வாறான கோரிக்கைகளை இந்தியாவிடம் முன்வைக்கும். இப்போது இந்தியா இவ்வாறு கோரியிருப்பதன் மூலம், இலங்கை மீதான இந்தியாவின் பிடி தளர்கின்றதா என்ற கேள்வி எழுகின்றது.

கடந்த மாதம் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஜனாதிபதியைச் சந்திப்பதற்காக இருந்தது. ஆனால், இறுதி நேரத்தில் சந்திப்பை ஜனாதிபதி ரத்துச் செய்தார். தற்போதைய நிலையில் தென்பகுதியில் பாதகமான நிலையை ஏற்படுத்தும் என ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது. ஆக, கூட்டமைப்பைச் சந்திப்பதற்கே தயாராக இல்லாத ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் இதனை அவர்கள் எவ்வாறு வலியுறுத்த முடியும்?








விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# எத்தனை கோடி இன்பம் வைத்தாய் 07

கலாசூரி
திவ்யா சுஜேன் (இலங்கை)


அகத் தேடலுக்கு வழி சமைக்கும் அற்புத சாதகமாய் நாட்டியம் இருப்பதாலோ தெரியவில்லை அவ்வப்போது சவால்களையும் சந்திக்க நேரிடும். அப்படி ஒரு சமயத்தில் சீரடி சாயியின் அருளுக்குள் அறிமுகமானேன்.

படைப்பின் பரப்பில் கொட்டிக்கிடக்கும் உணர்வுபூர்வமான விடயங்களை நாட்டியத்தோடு இணைத்துப் பார்க்கும் தன்மை என்னிடம் எப்போதும் இருந்ததால் சாயியின் அன்பினில் ஆட்கொண்ட நாள் முதல் அவரது சத் சரிதத்தினை நாட்டிய படைப்பாக ஆக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. அவ்வெண்ணத்தை எவ்வாறு நிகழ்த்த வேண்டுமோ அவ்வாறு நிகழ்த்தி தருமாறு பாபாவின் பாதத்தில் சத் சரித புனித நூலினை வைத்து சரண் புகுந்தேன்.

3 ஆண்டுகள் கடந்தன. மாமழையென அருளினார் பாபா. இந்நிகழ்வினை நடாத்த துணையாக இருக்க கூடியோரை தக்க தருணத்தில் ஒவ்வொருவராக அறிமுகப்படுத்தி வைத்தார்.

முதலில் இசை மேதை லால்குடி GJR கிருஷ்ணன் அவர்களின் அறிமுகம் கிட்டியது. அவரை சந்திக்க சென்ற பொழுது சீரடி பாபாவின் மிக பிரமாண்டமான உருவப் படத்தை வீதியில் தரிசிக்கவும் நேர்ந்தது. அன்று வியாழக் கிழமை. அன்று அறிந்திருக்க வில்லை சாயி சத்சரித இசை அவராலேயே நிகழ்த்தப்படும் என்று.

சில மாதங்களின் பின் சமூக சேவையாளரும் பிரபல வர்தகருமான தெ. ஈஸ்வரன் அவர்களின் நட்பு கிட்டியது. அவருடனான முதல் சந்திப்பிலேயே சாயி சத்சரிதம் ஆக்க வேண்டும் என்ற எண்ணத்தை எதேச்சையாக வெளிப்படுத்தினேன். அக்கணமே கண்ணீர் மல்க , சீரடி ஆலயம் ஒன்றினை அவிஸ்ஸாவௗ என்னும் இடத்தில் அமைக்க வேண்டும் என்ற முயற்சிகளை எடுத்து வருகிறோம். சீரடி சூசாயியின் மூல ஆலயத்திற்கான நிதி சேகரிப்பு நிகழ்வாக இந்த நாட்டிய நாடகத்தினை அமைத்து தருவீர்களா என்று விண்



ணப்பித்தார். இந்த நிகழ்வினை தயாரிப்பதற்கு மிக்க பொருத்தமான ஒரு ஆளுமையை சாயி தந்ததை எண்ணி வியந்தேன்.

அன்றிலிருந்து மிக துரிதமாக நம் பணிகள் ஆரம்பித்தது. சாயி சத்சரித நூலினை பவித்திரமாக கையில் எடுத்து முழுவதுமாக படித்து சாரமாக்கி இயலாக்கம் செய்ய ஆரம்பித்தேன். அவ்வேளை மேலும் பல நூல்களிலும், இறுவட்டுக்களிலும், காணொளிகளிலும் இருந்து தகவல்களைத் திரட்டி முழுநேரமும் சாயியின் கருணையில் திளைத்தவளாய் இருந்தேன்.

சென்னையில் சத்திய சாயி பாபாவின் பரிபூரண ஆசிகளை பெற்ற சாய் ஷ்ரவணம் என்னும் கலைஞுனின் ஒலிப்பதிவு கூடத்தில், செவிகளில் சேரச் சேர விழிகளை நனைத்து மெய்சிலிர்க்க வைக்கும் லால்குடி கிருஷ்ணன் ஐயாவின் இசையில் 90 நிமிட நாட்டிய படைப்பு உருப்பெற ஆரம்பித்தது. அவ்விசை வழங்க

## சீரடி சாய் சத்சரிதம்

பங்குபற்றிய அனைத்து கலைஞர்களும் இப்படைப்பினூடாகவே அறிமுகமானார்கள். அதில் யாவருமே சாய் பக்தர்கள் என்பதை அறியும் போது மிக மிக ஆச்சரியமாக இருந்தது.

தன் சரிதத்தை தாமே செதுக்கிக் கொண்டிருந்த சாயியின் மற்றொரு லீலை இப்படைப்பில் பங்குபற்ற இந்தியாவில் இருந்து இரண்டு நடனப்பள்ளிகள் தாமாக முன்வந்து இணைந்து கொண்டனர். ஒன்று திருச்சியில் வெள்ளி விழா கண்ட நடனப்பள்ளியாக இயங்கி வரும் திருமதி சுப்ரியா ரவிக்குமார் அவர்களின் ஸ்ரீப்ரியா நடனப்பள்ளி இரண்டாவது வேலூரில் உள்ள திருமதி மஹாலக்ஷ்மி கார்த்திகேயன் அவர்களின் லாஸ்ய நடனப்பள்ளி. இவர்களும் சாயி பக்த்தர்களே.

படைப்பிற்கு மேலும் அழகு சேர்க்கஒளிஒலிஅமைப்பினைவழங்க சாயி பக்தரான முருகன் கிருஷ்ணன் அவர்கள் சென்னையில் இருந்து வருகை தந்தார். இவ்வாறாக முதன் முதலில் கொழும்பு கதிரேசன் மண்டபத்தில் 24/06/2021 அன்று மேடையேற்றினோம்.

சாயி நாதரின் பரிபூரண அருளை அரங்கில் நிறைய செய்த அன்றைய மாலை பலரது கண்களை நனையச் செய்தது. மாண்புமிகு சபாநாயகர் திரு கரு ஜெயசூரிய அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்க, மாண்புமிகு ஆறுமுகம் தொண்டமான் உள்ளிட்ட பல பிரமுகரகளுடன் சீரடி நிலைய தலைவர் திரு தெ.ஈஸ்வரன் அவர்களின் முன்னிலையில் இந் நிகழ்வு இடம்பெற்றது.

சாயி நாதர் உறுதியாய் சொன்ன மதங்களின் நல்லிணக்கத்தை காட்டி இறைவன் ஒருவனே எனக் காட்டும் விதத்தில் வாசல் கோலம் அமைந்திருந்தது. முத்தமிழால் பணிந்து சீரடி சரண் புகும் இப் படைப்பைக் காண்போரும் கற்றோரும் கருதியோரும் நற்பலன் பெறட்டும் என்ற இறைவணக்கத்தோடு ஆரம்பித்தது நாட்டிய நாடகம்.

மேடையை சீரடி என நிர்ணயித்து அரங்கிற்கு வெளியிலிருந்து கல்யாண கோஷ்டியோடு பிரவேசித்த பாபா மிகத் த்த்ரூபமாக சாயி பாத்திரத்தை ஏற்றிருந்தார். நம் வாழ்க்கையில் அன்றாடம் கடைப்பிடிக்க வேண்டிய அரிய விடயங்கள் உள்ளடக்கியதாய் மிக இலகுவில் சபைக்கு எடுத்துச் செல்லும் வகையில் காட்சி அமைக்கப்பட்டிருந்து. நன்கு தேர்ச்சி பெற்ற அபுநயஷேத்ரா கலைஞர்களின் இயல்பான அபிநயமும், ஒருங்கிணைந்த ஈடுபாடும் மேடைக்கு ஆரோக்கியம் சேர்த்தது.

எக்காலத்திற்கும் உகந்த வகையில் தத்துவ விடயங்களையும், உண்மை விளக்கங்களையும், பக்தியின் மேன்மையையும் சொல்லி சொல்லி சென்றிருக்கும் சாயியின் முக்கிய இரு விடயங்கள் நெஞ்சாள்ந்து நிறைந்தால் எந்நாளும் துன்பம் இல்லை. ஒன்று பொறுமை மற்றொன்று நம்பிக்கை.

முதன் முறையாய் சாயி சத்சரிதத்தை நாட்டிய வடிவத்தில் அமைத்ததோடு, இயலாக்கம் , நட்டுவாங்கம், நடன அமைப்பு, ஒருங்கிணைப்பு, தயாரிப்பு என அத்தனையும் ஒருவாராய் நின்று இயக்கிய திவ்யா சுஜெனின் கடுமையான முயற்சியால் அவிசாவளை ஆலய நிர்மாணப் பணிக்கான நிதி எதிர்பார்த்ததை விட அதிகம் கிடைக்கப்பெற்றது என ஆலய சபையினரும் சாயி பக்தர்களும் ஆனந்தம் பொங்காத தந்த வாழ்த்துகளில் ‘‘எத்தனை கோடி இன்பம் வைத்தாய்’’.




Sari 1
Sari1 Fashion House
Taunus Straße 49, 60329 Frankfurt
Ph : 015219239663
பொன் உருக்குதல், தாலி கொடி செய்தல், காது குத்தல், பழைய நகைகளை
உடனுக்குடன் போலிஷ் செய்துகொள்ள, பழைய நகைகளை வாங்க விற்க மற்றும்
அனைத்து திருத்த வேலைகளுக்கும்
நாட வேண்டிய ஒரே இடம்
Sari1 Textile & Jewelry


New Asialand
உங்கள் அனைத்து மளிகை
தேவைகளுக்கும் ஒரே இடம்...
இந்த சலுகை
ஜூலை 10ஆம் தேதி
மட்டுமே !!!
- பசுமையான மரக்கறி வகைகள்
- உடன் கடல் உணவுகள்
- மளிகை பொருட்கள்
- உடன் ஆட்டு இறைச்சி
- பழவகைகள்
FREE!
€170,00க்கு மேல் மளிகை பொருட்கள்
வாங்கி 3 லிட்டர் பிரெஸ்டீஜ்
குக்கரை இலவசமாக பெறுங்கள்
Prestige
www.newasialand.eu
015201954064
Taunus Straße 49, 60329 Frankfurt



# சாப்பாட்டுக் கலைஞர்கள்

**சமையல் என்பது கலை, அதுவும் ஒரு அற்புதமான கலை. சமைத்ததை பரிமாறுவதும் ஒரு கலை, அதுவும் ஒரு அழகியல் கலைதான்.**

சமைப்பது எப்படி கலை ஆகுமோ, அதை பரிமாறுவது எப்படி கலையாகுமோ, அதேபோல் சமைத்ததை, பரிமாறியதை, சாப்பிடுவதும் ஒரு கலைதான். அழகாகச் சாப்பிட தெரிந்தவர்களும் கலைஞர்கள் தான். சாப்பிடத் தெரிந்தவர்கள் இருப்பதால் தான்,ஆனானப்பட்ட சமையல் வல்லுனர்களுக்கு வாழ்க்கையே அமைகிறது.

சாப்பிட தெரிந்தவன் இல்லாவிட்டால் சமையல் கலைஞர்களிற்கு மாட்சிமையும் இல்லை, சமைத்ததை பரிமாறத் தெரிந்தவனுக்கு மகிமையும் இல்லை. இவருக்கு சமைக்கத் தெரியாது, அவருக்கு தேத்தண்ணியே போடத் தெரியாது என்று யாரையும் குற்றம் குறை சொல்லக்கூடாது, அது அழகல்ல, நியாயமுமில்லை, தர்மமும் இல்லை.

சமைக்கத் தெரியாட்டியும் பரவாயில்லை, எவ்வளவு வடிவாக சாப்பிடுவார் தெரியுமா என்று புளங்காகிதம் அடைய வேண்டும், பெருமைப்பட வேண்டும், தலையில் ஏற்றி வைத்துக் கொண்டாடி மகிழ வேண்டும். சாப்பிடத் தெரிந்த கலைஞர்களை பார்த்தீங்கள் என்றால், இதை இப்படி, அதை அதோடு தான் சாப்பிட வேண்டும் என்ற வரைவிலக்கணம் அறிந்தவர்களாக இருப்பார்கள்.

கண்டதையும் கண்டதோடு கலந்து சாப்பிடவோ, கண்டதையும் நிண்டதையும் சாப்பிடவோ, மறுத்து உறுதியாக எதிர்த்து நிற்கும் மனத் தைரியம் உள்ளவர்காளாக சாப்பாட்டுக் கலைஞர்கள் வலம் வருவார்கள்.

எதை எப்படி எவ்வாறு சாப்பிடுவது என்பது சாப்பாட்டுக் கலைஞர்களிற்கு மட்டுமே தெரிந்த ஒரு அற்புதமான வித்தை என்று கூட சொல்லலாம்.

அந்த சாப்பாட்டு வித்தை, பிறப்பிலேயே அவர்களிற்கு வந்து அமைந்து விடுகிறதா, இல்லை வளர்ந்து வரும் போது வரும் பழக்கமா என்பது பற்றி அறிவதற்கான ஆய்வுகள் இப்பொழுது தான் அமெரிக்காவில் நடந்து கொண்டிருக்கிறதாம். இடியப்பத்தை சொதியோடு பிசைந்து விளாசிவிட்டு, விரலை சூப்புபவர்கள் எல்லாம் சாப்பாட்டு கலைஞன் தான்டாப்பா.

அது மட்டுமா...

அடுப்பில் கொதிக்கும் சட்டிக்குள் அகப்பையை விட்டு, ஆட்டுக் கறித் துண்டை நைஸாக பொறுக்கி, உள்ளங்கையில் இதமாக இறக்கி, பக்கென்று சுடச்சுட வாய்க்குள் போட்டு விட்டு, உள்ளங்கையில் மிஞ்சிய குழம்பையும் நக்குறவன் எல்லோரும் சாப்பாட்டு கலைஞர் சங்கத்தில் ஆயுட்கால அங்கத்தவர்கள் தான்யா.

அதேபோல..



பட்டரும் சீனியும் முட்டையும் போட்டு கலந்து அடித்த கேக் செய்யும் மாவை, கேக் அடித்த சட்டியில் இருந்து விரலால் தொட்டு நக்கிச் சாப்பிடும் வல்லமை படைத்தவர்கள் இந்த சமையல் கலைஞர்கள்.

சாப்பாட்டு கலைஞன் என்றார் விரல் சூப்புறவன், கறிச் சட்டி நக்குறவன் என்று மட்டும் நீங்கள் தயவுசெய்து குறைவாக எடை போட்டு விடக் கூடாது. நாடு நகரங்களிற்கு பயணிக்கும் போது, அந்தந்த நாட்டு உணவுகளை நாடி ஓடிச் சென்று சாப்பிட்டு மகிழ்பவனும் சாப்பாட்டு கலைஞனே.

சைனீஸ் நூடில்ஸை chop stick ஆலும், ரத்தமோடும் steak ஐ முள்ளுக் கரண்டாலும் கத்தியாலும் சாப்பிடோணும் என்ற அறிவு சாப்பாட்டு கலைஞனிற்கு நல்லாவே தெரியும். வாழை இலையில் எப்படி வழித்து துடைத்து சாப்பிடோணும் என்பதையும் சாப்பாட்டுக் கலைஞர்கள் தெரிந்தே வைத்திருப்பார்கள்.

சாப்பாட்டை சுடச்சுட சாப்பிட வேண்டும், என்று சாப்பாட்டுக் கலைஞர்கள் எப்பொழுதும் அடம்பிடிப்பார்கள். சூடாறிப் போன சாப்பாட்டை மீண்டும் சுட வைத்து சாப்பிடுவது கொடுமையிலும் கொடுமை, மகா கொடுமை என்று அவர்கள் தலையிலடித்துக் குழறுவார்கள். சாப்பாட்டுக் கலைஞர்களிற்கு பழைய சாப்பாடு என்றால் கண்ணிலும் காட்டேலாது. அதுவும் ப்ரிட்ஜில் வைத்து உறைந்து போயிருக்கும் மூன்று, நான்கு நாள் பழங்கறிகளை கண்டால் சாப்பாட்டுக் கலைஞர்களிற்கு விசரே வந்து விடும்.

சாப்பாட்டு கலைஞன் என்பவன் சாப்பாட்டை உயிருக்கு உயிராக காதலிப்பவனாக இருப்பான். சாப்பாடும், பெண்களைப்போல அல்லாமல், அவனை ஆழமாகக் காதலிக்கும். ஆதலால் சாப்பாட்டு கலைஞர்களை பொறுத்தவரையில், ''சாப்பாட்டுடன் ஒருதலைக்காதல்'' என்ற பேச்சுக்கே அங்கு இடமிருக்காது. எல்லாம் சரி, உதுக்கேன் இப்ப குத்தி முறிவான் என்று நீங்கள் கேட்கலாம்.

சமையல் கலைஞர்களிற்கு கொடுக்கும் முக்கியத்துவம், கௌரவம், மதிப்பு எல்லாம் இந்த சமூகம் சாப்பாட்டு கலைஞர்களிற்கு கொடுப்பதில்லை என்ற வேதனையால் தான் இந்த பதிவை எழுத உந்தப்பட்டேன்.

Master Chef போன்ற போட்டிகள் வைத்து சமையல் விற்பனர்களை கொண்டாடும் இந்த உலகம், அவர்கள் சமைப்பதை சாப்பிடும் சாப்பாட்டு கலைஞர்களிற்கும் போட்டி வைக்காமல் ஏன் புறந்தள்ளி ஒதுக்குகிறது? இது பாரபட்சம், discrimination-அது, இது, இல்லையா?

சாப்பாட்டு கலைஞர்களிற்கு சகிப்புத் தன்மையும் அவையடக்கமும் அதிகம் இருப்பதால், அவர்கள் இந்த அங்கீகாரங்கள், பட்டங்கள், பகட்டுக்களை விரும்பமாட்டார்கள் என்பதால், அவர்களின் முதுகில் ஏறி இந்த உலகம் சவாரி விடுகிறது. போகட்டும் விடுங்கள்..

''சாப்பாடே உங்கள் காதலியானால், பிறகென்ன, வாழ்க்கை குஷ்பூவை ஏற்றிய அண்ணாமலையின் சைக்கிள் போல் இறக்கை கட்டிப் பறக்கத் தொடங்கிவிடும்'' என்று யாரோ ஒரு சீன மூதறிஞர் சொல்லியது தான் இந்த இடத்தில் ஞாபகம் வருகிறது. சீன மூதறிஞர் சொன்னால் சரியாத் தானிருக்கும்.



ஜூட் பிரகாஷ்
(அவுஸ்திரேலியா)






# தலைப்பு வேறு செய்தி வேறு

## நடுப்பக்கம்



சேவியர்
(தமிழ்நாடு)

சில திரைப்படங்களுக்கு போஸ்டர் ஒட்டுவார்கள். பார்க்கும் போதே பிரமிப்பாய் இருக்கும். அதன் வடிவமைப்பும், ஒளிப்பதிவும், எழுத்துருவும் பார்வையாளர்களை வசீகரிக்கும். ஒரு அசத்தல் தலைப்பையும் போடுவார்கள். ஒரு பிரம்மாண்ட திரைப்படத்தைப் பார்க்கப் போகிறோம் எனும் ஆர்வத்தை அது தூண்டி விடும். அதை நம்பி படத்துக்குப் போய் உட்கார்ந்தால் ஒரு மரண மொக்கை படத்தைப் பார்க்க நேரிடும். கற்ற வித்தை மொத்தத்தையும் போஸ்டர் செய்யவே செலவழிச்சாங்களோ என தோணும்.

‘தும்பா படத்தை மொக்கையா எடுத்ததே பரவாயில்லை, போஸ்டரையும் அப்படியே எடுத்திருந்தா ஏமாந்திருக்க மாட்டோம்ல’ என டைரக்டரின் சட்டையைப் பிடித்துக் கேட்கத் தோன்றும்.

அதே போல தான் சில டிரைலர்கள். ஒரு பரபரப்பான திரில் படம் போல சில நிமிடங்கள் ஓடும் அந்த டிரைலர் இருக்கும். அதை நம்பி அந்தப் படத்தைப் போய்ப் பார்த்தால், நல்ல காட்சிகளெல்லாம் ஏற்கனவே டிரைலரில் பார்த்ததாகத் தான் இருக்கும். வேற சரக்கு ஒன்றுமே இல்லை என்பது புரியு வரும். அல்லது ஒரு பரபர திகில் படம் போல எடுக்கப்பட்ட டிரைலர், ஒரு சாதாரண நாடகம் போல மாறி நம்மை இம்சிக்கும்.

பார்வையாளர்களிடம் ஒரு போலியான பிம்பத்தை உருவாக்கி அவர்களை படம் பார்க்க வைப்பது தான் இதன் அடிப்படை சிந்தனை. இதில் விழுந்து விடுபவர்கள் எக்கச்சக்கம். கடைசியில் பார்வையாளர்கள் கடும் எரிச்சலிலும், கோபத்திலும் தான் படத்தை மூடி வைப்பார்கள்.

### தலைப்புக்கும் செய்திக்கும் சம்பந்தமே இருக்காது

இதே நிலை இன்று செய்தி தளங்களிலும் நுழைந்து விட்டது. அதிலும் சில ஆன்லைன் செய்திச் சேனல்கள் பண்ணும் அலம்பல் தாங்க முடிவதில்லை. அவர்களுடைய தலைப்புக்கும் செய்திக்கும் சம்பந்தமே இருக்காது. அல்லது




செய்திக்கு போட்டிருக்கும் தலைப்பைப் பார்த்து விட்டு ஒரு பெரிய விஷயம் இருக்கிறது என போய் பார்த்தால் உப்பு சப்பில்லாத ஒரு மேட்டர் தான் இருக்கும்.

ரமேஷ், ராணிய இருபது வருஷங்களுக்குப் பிறகு சந்தித்தான். பிறகு நடந்தது தான் ஹைலைட்டே! என தலைப்பு போடுவார்கள். அப்படி என்ன ஹைலைட் என அறிய வாசகர்கள் கிளிக்குவார்கள். ஆயிரம் விளம்பரங்களுக்கிடையே வாசித்தால், கடைசியில் ‘நாம சந்திச்சு இருபது வருஷம் ஆச்சா?’ என ரமேஷ் ஆச்சரியமாகக் கேட்டான் என முடிப்பார்கள். ‘உங்களுக்கெல்லாம் மன சாட்சியே இல்லையா?’ என கத்தத் தோணும்.

### அந்தப் பெண் கேட்ட அதிரடிக் கேள்வி

அல்லது, வழிமறித்து நின்ற போலீஸ், அந்தப் பெண் கேட்ட அதிரடிக் கேள்வி! ‘வெலவெலத்த போலீஸ்’ என தலைப்பு இருக்கும். அப்படியே ஒரு ஆர்வத்தைத் தூண்டும். பரபரவென படித்தால், ‘ஏற்கனவே லேட்டாச்சு, இப்படி செக்கிங் பண்றீங்களே’ என்று கேட்டார். தைரியமாக அந்தப் பெண் கேட்டதும் போலீசார் வெலவெலத்தனர்! என போடுவார்கள். இது தான் உங்க ஊர்ல அதிரடிக் கேள்வியாப்பா என கேட்கத் தோன்றும்.

### நள்ளிரவில் முதலிரவு அறைக்குள் திடீரென நுழைந்த நபர்!

இதெல்லாம் ஆர்வத்தைத் தூண்டும் வகையறா என்றால், இன்னொரு டைப் உண்டு. வாசகரை விகல்பமாகச் சிந்திக்க வைத்து, கட்டுரைக்குள் இழுப்பது. உள்ளே இருப்பதென்னவோ

17 ஆம் பக்கம் பார்க்க...

S.K.SILKS GOLD PARAADISE
Adler Str 33 - 44137 Dortmund | Tel: 0231 9501 647
Mobil: 01705429251
Mr.P.Sritharan,
Proprietor

PANCREAS SUPPORT
கணையக்காவலன்
CMP
MFG License. No .730
HERBAL MEDICINE
இயற்கை இருக்க இன்சுலின் ஊசி இனி எதற்கு?
Insulin Booster ஆலோசனை தொலைபேசியில் இலவசம்
ஔடதம் Aowdatham ஆரோக்கிய வாழ்வின் ஆரம்பம்




A.B.Thevaraj
Geobiological Expert (Certified)
Natropathy
Councelling & Sales
www.aowdatham.com
+4915214945800
Covid- 19 காலத்தில் உங்கள் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க உதவும்.
பக்க விளைவுகள் இல்லாத 48 மூலிகைகளின் கலவை
- நீரிழிவு நோயை சுகப்படுத்த,
- நீரிழிவு நோயால் ஏற்படும் உபாதைகளை தவிர்க்க
- நீரிழிவு நோயை வருமுன் காக்க
- உயர் இரத்த அழுத்தத்தை தவிர்க்க
- புத்துணர்ச்சி பெற
- தாம்பத்திய வாழ்க்கையில் சந்தோசமாய் இருக்க
- கொலஸ்டரோலைக் குறைக்க உடல் எடையைக் குறைக்க
நீங்களும் அருந்தி பயன் பெறுங்கள்
தினமும் காலை, மாலை 5 கிராம் சுடுதண்ணீரில் கலந்து குடிக்கவும்
48 மூலிகைகள் கொண்ட சர்க்கரைக்கொல்லி நீரிழிவு சூரணம்




நாலு காசு தேறாத ஒரு சப்பை மேட்டர் தான். உதாரணமாக 'நள்ளிரவில் முதலிரவு அறைக்குள் திடீரென நுழைந்த நபர்' என தலைப்பு போடுவார்கள். செய்தியைப் வாசித்தால், மறுநாள் முதலிரவு நடைபெறுவதாக இருந்த அந்த அறையில் ஏசி வேலை செய்யாததால் அதை பழுது பார்க்க ஒருவர் வந்ததாக அறிந்தபின் நிம்மதி ஏற்பட்டது என போடுவார்கள். ஒரு சின்ன அல்ப கிளுகிளுப்பைக் கிள்ளி விட்டு வாசகனை ஏமாற்றுவது இது.

**பிரபல நடிகையில் கெஸ்ட் ஹவுசுக்குள் தனியே இருந்த பிரபல நடிகர்**

அதே போல 'பிரபல நடிகையில் கெஸ்ட் ஹவுசுக்குள் தனியே இருந்த பிரபல நடிகர்' என போடுவார்கள். அது எந்த நடிகைடா? அப்படி ஏது நடிகர்டா? என வாசகன் வாயில் எச்சில் வழிய எட்டிப் பார்த்தால், உகாண்டாவிலுள்ள தொலைக்காட்சி நடிகை ஒருவர், நடிகர் ஒருவருடன் ஸ்டோரி டிஸ்கஷனில் இருந்தார் என முடிப்பார்கள்.

இன்றைக்கு யூடியூப் போன்ற சானல்களில் வருகைக்கு தக்கபடி வருமானம் என்பது உண்டு. அதனால் அதன் தலைப்புகள் இன்னும் வேற மாதிரி மக்களை இம்சிக்கும். 'மரண அடி' என தலைப்பு போடுவார்கள். உள்ளே சொத்தையாய் ஒரு செய்தியை நீட்டி முழக்குவார்கள்.

இத்தகைய தலைப்புகள்மீது எனக்கு தனிப்பட்ட முறையில் எரிச்சல் உண்டு. ஒரு தடவை, இரண்டு தடவை தான் ஒரு வாசகனை ஏமாற்ற முடியும். அதன் பிறகு அவனுக்கே தெரியும்,'இவன் வெட்டியா ஒரு தலைப்பு போடுவான், மேட்டர் ஒண்ணும் இருக்காது' என்பது. இதன் மூலம் அந்த பத்திரிகை தன்னுடைய இயல்பை இழந்து விடும். நம்பகத் தன்மையை இழந்து விடும்.

அதன்பிறகு ஒரு முக்கியமான செய்தி போட்டால் கூட வாசகன் அதை கவனிக்காமல், அல்லது நிராகரித்துக் கடந்து செல்லும் வாய்ப்புகள் மிக அதிகம். பத்திரிகை என்பது பளிச் என ஒரு செய்தியைச் சொல்ல வேண்டும். தலைப்பு ஆர்வத்தைத் தூண்டலாம் தவறில்லை, ஆனால் விஷயத்தோடு ஒத்துப் போகவேண்டும்.

**'பெண்ணின் கேள்விக்கு அமைச்சர் அசத்தல் பதில்'**

'பெண்ணின் கேள்விக்கு அமைச்சர் அசத்தல் பதில்' என போடலாம் தப்பில்லை. ஆனால் அமைச்சர் ஒரு பதிலை சொல்லியிருக்க வேண்டும், அது ரசிக்கும்படியான பதிலாய் இருந்திருக்க வேண்டும். அதே போல, 'உகாண்டாவின் நடிகை' என போடுவதில் என்ன இருக்கிறது ? ஒருவேளை அதை வாசிக்கும் வாசகர்களின் எண்ணிக்கை குறைவாய் இருக்கலாம். ஆனால் அந்த செய்தியை விரும்பும் வாசகர்கள் வாசிப்பார்கள் இல்லையா ?

ஒரு ஹோட்டலில் நல்ல உணவு இருந்தால் தான் தொடர்ந்து மக்கள் வந்து உண்பார்கள். மெனு கார்ட் மட்டும் சூப்பராக இருந்தால் ஒரு தடவை தான் ஏமாறுவார்கள். அல்லது முதல் தடவை வருபவர்கள் மட்டும் தான் ஏமாறுவார்கள். புத்தகத்தின் அட்டையை அட்டகாசமாய்ப் போடுவதில் தவறில்லை ஆனால் உள்ளே விஷயமும் சுவாரஸ்யமாய் இருக்க வேண்டும்.

சும்மா ஒரு வசீகர பேச்சில் ஏமாற்ற நினைக்கும் பத்திரிகைகள் நிலைப்பதில்லை. சரியான தலைப்புகளுடன் சரியான செய்திகளைப் போடும் பத்திரிகைகள் தான் மதிக்கப்படும். காலப் போக்கில் அந்த பத்திரிகை நம்பகத் தன்மையையும் பெற்றுவிடும். எதை வாசிக்க வேண்டும் எதை வாசிக்க வேண்டாம் என்பதை வாசகன் எளிதில் தீர்மானிக்க முடியும். இதன்மூலம் வாசக அனுபவமும் மேம்படும் நேரமும் பயனுள்ள வகையில் செலவாகும்.

வெறுமனே ஒருவரை போக்கு காட்டி ஏமாற்றி உள்ளே இழுப்பதில் அர்த்தமில்லை. அப்படி இழுக்க, பத்திரிகை என்பது சர்க்கஸ் கம்பெனி அல்ல. அது சரியான செய்தியை, தெளிவாக, பயனுள்ள வகையில் பதிவிடுவது தான். இந்த அடிப்படை உண்மையைப் புரிந்து கொண்டாலே போதும்.

உதாரணமாக அரை நூற்றாண்டு கண்ட வெற்றிமணியின் தலைப்புகளில் ஒரு இலக்கிய சுவை இருக்கும், ஒரு அழகியல் இருக்கும், அந்த கட்டுரையை முழுமையாய் வடித்துத் தருகின்ற சாரம்சத் தலைப்பு இருக்கும். செய்திகள் ஒவ்வொன்றும் அற்புதமான வாசக அனுபவமாய் இருக்கும். இது தான் தேவையானது. இது தான் ஒரு பத்திரிகையின் இயல்பாய் இருக்க வேண்டும்.

## குட்டி Story

# கடுகுக்கதை - குட்டி போட்ட மயிலிறகு



எங்கட வகுப்பில எல்லாற்ர
மயிலிறகும்
குட்டி போட்டிட்டுது, என்ர
மயிலிறகு மட்டும்
இன்னும் குட்டி போடேல்லை.
எல்லோரும்
என்னைப் பரிதாபமாகப்
பார்த்தார்கள். என்
நிலைமையைப் பார்த்து,
ஒரு நண்பி இரங்கி,
'ஒவ்வொரு நாளும் எண்ணெய்
பூசு, குட்டி போடும்'
என்றாள். நானும் சாமி
விளக்கிலிருந்து எண்ணெய்
எடுத்து மயிலிறகுக்குப் பூசி
புத்தகத்தில் கவனமாய்
வைத்தேன். ஒன்று, இரண்டு,
மூன்று, நான்கு,
ஐந்து, ஆறு என்று நாட்கள்
போயினவே தவிர,
எதுவும் நடக்கவில்லை.
ஏழாம் நாள், நான்
மீண்டும் ஆற்றாமையுடன்
எண்ணெய் பூசும் போது,
ஒரு சின்னக் குட்டி கையில்
பிய்ஞ்சு வந்திச்சுது.
அடுத்த நாள், பள்ளிக்கூடத்தில
என்ர மயிலிறகு
குட்டி போட்ட கதைதான்,
ஹைலைட். ம்ம்ம்,
இப்பவும் சில வீடுகளில்
இன்னமும் மயிலிறகு
குட்டி போட்டுக்
கொண்டுதானிருக்குது!



**தமிழினி பாலசுந்தரி**
**(நியூஸிலாந்து)**







# யேர்மனியில் 20 தமிழர்கள் நாடு கடத்தல்

## தனி விமானத்தில் இலங்கைக்கு அனுப்பப்பட்டனர்!

அரசியல் தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட 20 தமிழர்கள் 09.06.2021 இரவு தனி விமானம் ஒன்றில் ஏற்றப்பட்டு இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டுள்ளார்கள். யேர்மனி, பிராங்போர்ட் விமான நிலையத்தில் தமிழர்கள் உட்பட பெருந்தொகையானவர்கள் முன்னெடுத்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்துக்கு மத்தியில் இந்த 20 தமிழர்களும் பலவந்தமாக தனி விமானம் ஒன்றில் ஏற்றப்பட்டு இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டுள்ளார்கள்.

அரசியல் தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டவர்களே இவ்வாறு நாடு கடத்தப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனை எதிர்த்து மனித உரிமை அமைப்பும், ஏனைய சில அமைப்புகளும் இணைந்து போட்ஸ்ஹைம் நகரில் அமைந்துள்ள தடுப்பு முகாமுக்கு எதிரில் தொடர் போராட்டத்தை நடத்தியிருந்தார்கள். இந்தக் கடுமையான போராட்டத்துக்கு மத்தியில் பொலிஸ் பாதுகாப்புடன் வாகனம் ஒன்று தடுப்பு முகாமுக்கு உள்ளே வந்து அகதிகளை ஏற்றிக் கொண்டு விமான நிலையம் சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, நாடு கடத்தப்படுவதற்காகத் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களில் இருவர் விடுதலை செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.





# யாழில் கரை ஒதுங்கிய பெரிய திமிங்கிலம்!

யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட சுருவில் பகுதியில் உயிரிழந்த நிலையில் 30 அடி நீள திமிங்கிலம் ஒன்று 15.06.2021 காலை கரையொதுங்கியது.

கடந்த 11ம் திகதி வேலணையின் சாட்டி கடற்கரையோரத்தில் திமிங்கிலம் ஒன்று உயிருடன் கரையொதுங்கியிருந்த நிலையில் மீனவர்கள் இணைந்து அதனை படகில் கட்டியிழுத்துச் சென்று நடுக்கடலில் விட்டனர்.

இந்நிலையில் ஊர்காவற்றுறை சுருவில் கரையோரத்தில் திமிங்கிலம் ஒன்று உயிரிழந்து கரையொதுங்கியுள்ளது. சாட்டி கரையோரத்தில் கரையொதுங்கியதாகக் கருதப்படும் அதே திமிங்கிலமே இறந்த நிலையில் ஊர்காவற்றுறையில் கரையொதுங்கியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.




## கற்றிங்கன் வரசித்தி விநாயகர் அலங்கார உற்சவம்- 21.06.2021




*யேர்மனி கற்றிங்கன் அருள்மிகு ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்தில் அலங்கார உற்ஷவம் (12.06.21 தொடக்கம் 21.06.21) மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இத்திருவிழாவில் ஐங்கரனின் அருள் ஒளியையும், அவனது அருட்கடாட்சத்தை பெற்று இன்புற்றுக் கொண்டிருக்கும் அடியவர்களையும் காணலாம்.*

விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# நானோ அறிவியல்- கண்ணுக்குத் தெரியாத தொழில்நுட்பம்

# உடலுக்குள் சென்று நோய் தீர்க்கும் கருவி!

## அதன் பிரம்மாண்டமான விளைவுகளும்



நாம் வாழும் இந்த நவீன உலகில், நமது வாழ்க்கைமுறையையும் மாற்றி அமைத்த 20ம் நூற்றாண்டின் தொழில்நுட்பங்கள் என்றால் அந்த வரிசையில் கார், விமானம் மின்னியல் வானொலி, தொலைக்காட்சி கணினி, தொலைப்பேசி, விண்கலம், இணையம் என்று சொல்லிக் கொண்டே போகலாம். இந்தத் தொழில்நுட்பங்கள் இல்லாமல், நமது இன்றைய வாழ்க்கையைக் கற்பனை பண்ணிக் கூட பார்க்க முடியாது.

சரி, இது எல்லாமே 20ம் நூற்றாண்டின் மாபெரும் தொழில்நுட்பங்கள் என்றால், 21ம் நூற்றாண்டின் தொழில்நுட்பம்என்று கூறப்படுவது எது? அது எதுவாக இருக்கலாம் என்று நீங்கள் எங்கு தேடிப் பார்த்தாலும், அதைக், கண்டிப்பாக உங்கள் கண்களால் காணப்போவதே



இல்லை. அதற்குக் காரணம் என்ன தெரியுமா? அது உங்கள் கண்களுக்குத்தெரியாத அளவிற்கு மிகவும் சிறிதான தொழில்நுட்பமாகும்.புரியவில்லையா? இதைக் கற்பனை பண்ணிப் பாருங்கள். உங்கள் வீடுகளில் உள்ள ஜன்னல்களைக் கழுவி சுத்தம் செய்வதில் உயிரே போய் விடும் அல்லவா? இதுவே அந்த ஜன்னல்கள் தன்னைத்தானே சுத்தம் செய்து கொண்டு இருக்கும் என்றால், எப்படி இருக்கும்?

சரி,இது ஒரு பக்கம் இருக்கட்டும், இன்னும் ஒரு உதாரணத்தைப் பார்ப்போம். கட்டடங்களை அமைப்பதற்கு பெரும்பாலும் உபயோகிக்கப்படும் ஒரு உலோகம் உருக்கு ஆகும். இந்த உருக்கை கலப்புலோகம் என்றும் கூறுவார்கள், ஏன் என்றால் அது இரும்பை ஒரு முக்கிய பாகமாகக் கொண்டிருக்கின்றது. உருக்கு மிகவும் பலமாக இருப்பதால் தான் அதை இன்று காணக்கூடிய மாபெரும் கட்டடங்களைக் கட்டுவதற்குக்கூடபயன்படுத்துகின்றார்கள். ஆனால் இதைக் கற்பனை பண்ணிப் பாருங்கள், இந்த உருக்கை விட 100 மடங்கு பலம்கூடிய ஒரு உலோகத்துடன் கட்டடங்களை அமைக்கலாம் என்றால், எப்படி இருக்கும்?



Dr.நிரோஷன் தில்லைநாதன்
(யேர்மனி)

நானோ தொழில்நுட்பமா? அப்படி என்றால்? இதற்கு முதலில் நானோ என்றால் என்ன என்பதைப் பார்க்கவேண்டும். இந்த நானோ எனும் வார்த்தை கிரேக்க மொழியில் இருந்து வந்தது. அதை மொழிபெயர்த்தால் சிறிது என்று அர்த்தம்வரும். என்ன தான் இந்த வார்த்தைக்குச் சிறிது என்று அர்த்தம் இருந்தாலும், நானோ தொழில்நுட்பம் கொஞ்சம்கூடச் சிறிய ஒரு விஷயமே கிடையாது. உண்மையில் சொல்லப்போனால் நானோ தொழில்நுட்பம் தான் 21ம்நூற்றாண்டின் அடிப்படை தொழில்நுட்பமாக இருக்கப்போகின்றது.



ஒரு சென்டிமீட்டரை இலகுவாகக் கற்பனை பண்ணிப் பார்ப்பீர்கள். இதுவே ஒரு மில்லிமீட்டர் என்று வரும் போது, அதைக் கற்பனை பண்ணிப்பார்ப்பது சற்றுக் கடினமாக இருக்கலாம், ஆனால் அதை விடச் சிறிதாக இருக்கும் அனைத்து அளவுகளையும் மனிதர்கள் ஆகிய நம்மால் இலகுவாக சிந்தித்துக்கூட பார்க்க முடியாது. இருந்தும் ஒரு மில்லிமீட்டரை ஆயிரத்தால் வகுத்தால் கிடைப்பது ஒருமைக்ரோமீட்டர். இதே ஒரு மைக்ரோமீட்டரை மீண்டும் ஆயிரத்தால் வகுத்தவுடன் கிடைப்பது தான் ஒருநானோமீட்டர். எனவே ஒரு மீட்டரை 1,000,000,000 ஆல் வகுக்கும் போது வரும் மிகச்சிறிய அளவைத்தான் ஒருநானோமீட்டர் என்று அழைக்கின்றோம். இவ்வாறான ஒரு அளவை நம்மால் கற்பனைகூட பண்ணிப் பார்க்கமுடியாது, ஆனால் இதற்கும் நானோ தொழில்நுட்பத்துக்கும் என்ன சம்மந்தம் இருக்கிறது?

நானோமீட்டர் அளவுகளில் செய்யப்படும் ஆராய்ச்சி மற்றும் அதே அளவுகளில் உருவாக்கப்படும் தொழில்நுட்பத்தைநானோ அறிவியல் மற்றும் நானோ தொழில்நுட்பம் என்றும் அழைக்கின்றோம். சுருக்கமாகச் சொல்லப் போனால், நானோ அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் நமக்கு நன்றாகவே தெரிந்த விஷயங்களில் ஒருசில அணுக்களைச் சேர்க்கும் போது, நமக்குத் தெரிந்த அந்த விஷயங்கள் கூட புதுப்புது பண்புகளைப் பெற்று நமக்கு பெரும் நன்மைகளைத் தந்துவிடுகின்றன. இது தான் நானோ தொழில்நுட்பம் ஆகும். என்ன புரியவில்லையா?

சரி, இதற்கு ஒரு உதாரணத்தைப் பார்க்கலாம். நான் ஆரம்பத்தில் கூறியது போல் ஜன்னல்கள் தன்னைத் தானேசுத்தம் செய்தால் எவ்வளவு இலகுவாக இருக்கும், அல்லவா? நானோ தொழில்நுட்பத்தின் உதவியுடன் இவ்வாறானஜன்னல்களை ஏற்கனவே உருவாக்கி விட்டார்கள். ஜன்னல் கண்ணாடிகளில் தைட்டானியம் டையாக்சைட் (titandi-oxide) அணுக்களைச் சேர்த்தால் போதும், அந்தக் கண்ணாடிகளில் சூரிய ஒளி படும்போது,

24 ஆம் பக்கம் பார்க்க...





விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

நீண்டகாலம் மக்கள் மனதில் நம்பிக்கை ஒளி பரப்பும் தங்க நகையகம்

# Jaffna Bazar Jewellery




தங்க நகைகள் என்றால் தங்கள் மனதில் நிலைத்து இருப்பவர்கள் நாங்கள் என்றும் நாடுகள்

2021 ஆண்டுக்கான புத்தம் புது டிசைன்கள், கலைநயம் மிளிரும் தரமான தங்க நகைகள் எம் கையிருப்பில்.



பொன்னுருக்கு, காதுகுத்து வைபவங்களுக்கு எம்மை அழையுங்கள்

திருத்த வேலைகள் குறுகிய காலத்துள் செய்து தரப்படும்.



ஆலயங்களுக்கு தேவையான பூஜை பொருட்கள் எம்மிடம் நிறைவாக உண்டு

உங்கள் இலத்திற்கு தேவையான மளிகைப் பொருட்கள் என்றும் போல் மலிவு விலையில் கிடைக்கும்

பசுமையான மரக்கறி வகைகள்
கடல் உணவு வகைகள்
அனைத்தும் எம்மிடம் தரமாக
மலிவாகக்கிடைக்கும்

Jaffna Bazar

Jaffna Bazar, Kaiser Straße.49 ,
69329 Frankfurt Main

Tel: 069 25 62 6353 \ 0049 69 25626353
0049 179 4792961 \ 0049 151 71520425

விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# அர்த்தமுள்ள அகவைத் திருநாள் அன்றும்,இன்றும்



கரிணி
(யேர்மனி)

பத்து மாதங்களின் காத்திருப்பு, பத்தியம் பத்திரம் என பாதுகாத்த உயிர், விழிகளால் பார்ப்பதற்கு முன்னரே பாசப் போராட்டம் எப்பேற்பட்ட பொறுமை மற்றும் தவம் அத்தவத்தால் கிடைத்த வரம். இது என்ன சாதாரண நாளா? ஓர் உயிர் தன்னை பரிணாமித்துக் கொள்ள சிறந்ததொரு பயணத்தை தொடங்குகின்ற நாள். இந்த நாளை எப்படி எடுத்துக் கொள்வது.

நாள் கோள் கணக்குகளை திண்ணையில் இருந்து கணித்தனர் எம் முன்னோர்கள். ஒரு குழந்தை தாயின் கர்ப்பத்திலிருந்து வெளிவந்து சுயமாக சுவாசிக்கும் தருணத்தில் அந்த சூழலில் காணப்படுகின்ற பேரண்டத்தின் அலைவரிசை, கிரகங்களின் கதிர்வீச்சு மற்றும் திசை, காலநிலை என்பனவற்றை வைத்தே அந்த குழந்தைக்கான ஜாதகம் உருவாகிறது. இது வாழும் காலம் வரை மாறாது. எப்பேற்பட்ட கதிர்வீச்சோடு அக்குழந்தை பிறக்கிறதோ அதற்கேற்றாற்போன்ற கதிர் வீச்சுக்களோடு இலகுவில் ஒத்திசையும். இதனால் தான் சோதிடத்தில் கிரகங்களின் கதிர்வீச்சுக்கள் அதிகமாக விழும் இடங்களையும், நாட்களையும் கண்டுணர்ந்து இந்த இந்த நட்சத்திரத்தை உடையவர் இந்த நாளில் இந்த தலத்திற்கு சென்று சிறிது இருந்து வரச் சொல்லியுள்ளனர். அதன் அடிப்படையிலேயே முன்பு பல வழிபாட்டுத் தலங்கள் அமைக்கப்பட்டன.

இன்று பயனுள்ள பல விடயங்கள் வழக்கொழிந்து போனாலும் பல பயன்படாத விடயங்கள் உட்புகுந்துள்ளன என்பது கவலைக்குரிய விடயமாகும்.

> பச்சைக் குழந்தை யடி!-கண்ணிற்
> பாவை யடி சந்திரமதி!
> இச்சைக் கினிய மது -என்தன்
> இருவிழிக்குத் தே நிலவு

எப்பேற்பட்ட இனிய மங்கல நாள் இப் பூமியை தொட்ட திருநாள், இங்கு கூடி வாழும் பல்லுயிர்களோடு இங்குள்ள வளங்களை, அன்பை, பகிர்ந்து மகிழ்ந்து கொண்டாடும் நாள். பிறந்த பின் சிறந்து விளங்கிய விடயங்களையும் எண்ணிப் பூரிக்கும் நன்நாள். இது எவ்வாறு நினைவு கூரப்பட வேண்டும். இன்றைய நாகரிகத்தில் எவ்வாறு கொண்டாடப்படுகிறது.

கருவாக உருவாகி அந்த கரு பல்வேறு புற மற்றும் அக சூழல் காரணிகளால் சிதைவுறாது காக்கப்பட்டு பெரும் கனவுகளோடு காத்திருந்த அன்னையின் கையில் பொக்கிசமாக கிடைத்த ஒரு பிறப்பின் மகத்துவத்தை அதன் அடுத்து வருகின்ற அகவை திருநாளை கொண்டாடுகையில் இன்னொரு ஜீவனின் பிறப்பிற்காக காத்துக் கொண்டிருக்கும் முட்டையின் கருக்களை சிதைத்து அதனோடு இன்னோரன்ன பொருட்களை சேர்த்த பின் வாய்க்கு இதமான பதார்த்தத்தை கேக் என்ற பெயரில் உருவாக்கி அதன் மீது மெழுகு வர்த்தியை ஏற்றி ஒளிரப்போகும் சுடரை ஊதி அணைத்து ஏதோ ஒரு அமங்கலமாக அதிர்வலை ஏற்படக் கூடிய செயல்களுடன் அற்புதமான பிறப்பின் நினைவுகள் இன்று உலகம் தோறும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. இச் செயற்பாடு எதிர்மறையாக உள்ளது. நாட்டுக்கு நாடு பல்வேறு கலாச்சாரங்கள் இருப்பினும் பழமை வாய்ந்த தமிழருக்கு என இருந்த அற்புத கலாச்சாரங்கள் அழிவடைந்து காரண காரியமற்ற வெறும் காட்சிக் கூத்துகளாக அரங்கேறி வருகின்றன.

மதுபானப் புட்டிகளில் நுரை சீறியடிக்க, வாழ்த்து சொல்ல வந்தவர் வாய்ச்சொல் குழற, பிறந்த நன்நாளில் உலகில் வாழ்வதற்கென சம உரிமையோடு வந்த சில பிராணிகள் மட்டும் துன்புற்று சட்டிகளில் இறந்து கிடக்கும், பிறப்பதற்கு மூலமான பிதா மாதாவையே வர வேண்டாம் என்று கூறிவிட்டு குட்டி கும்மாளத்தோடு குட்டிச்சுவராகி போய் விட்டது கொண்டாட்ட நிகழ்வு.கடா வெட்டி படையலிட்டு கொண்டாடியவர்களும் உண்டு.

தமிழர் மரபில் விளக்கை ஏற்றியே எந்த ஒரு நிகழ்வும் ஆரம்பிப்பது வழக்கம், அதனை அணையவிடாது பாதுகாப்பார்கள். மற்றும் அந்த விளக்கினையே பல சம்பவங்களில் சாட்சியாகவும் கொண்டிருக்கின்றனர். அக்கினி சாட்சி இல்லாமல் மங்கல நிகழ்வும் இருந்ததில்லை, புனிதமான மரணச் சடங்கும் இருந்ததில்லை. விளக்கு என்பது மங்கலமானது, உயிரோட்டத்தோடு தொடர்புடையது.

நெய் விளக்கில் இருந்து அதிகப்படியான பிராண ஆற்றல் வெளிப்படுகின்றது. இது அதன் சூழலை ஆரோக்கியமாகவும் புத்துணர்வோடும் வைத்திருக்கும். அதிகப்படியாக உறவினர் ஒன்று கூடும் இடத்தில் இது மிகவும் பயனளிப்பதாக இருக்கும். அதிக பிராண ஆற்றல் வேண்டியே ஆலயங்களில் ஆற்றல் தரக்கூடிய எண்ணைகளை கண்டுணர்ந்து முன்னோர்கள் கூறிச் சென்றதால் அதனைக் கொண்டு விளக்கேற்றி பின்பற்றி வருகின்றனர். இவை பல்வேறு வாசனைகளும், வர்ணங்களும் ஊட்டப்பட்ட மெழுகு திரியில் இருப்பதில்லை. மாறாக இவை தன் சூழலை மந்த நிலைக்கு தள்ளிவிடும். சுவாசத்தினூடே உட்சென்று சுவாசப்பை ஓரங்களில் படிந்து காற்றின் பிராண சக்தி உடலுக்கு கிடைக்கும் விகித்த்தை குறைத்து விடுவதுடன் அதிகமான மெழுகு திரியின் அருகாமை நாளடைவில் பக்க விளைவுகளையும் ஏற்படுத்தும். ஒவ்வொரு பொருளுக்கும் அதனதன் தன்மைக்கேற்ப அதிர்வலை உண்டு.

அன்று தொட்டு பிறந்த பொழுது எதுவென குறித்து வைத்து ஆங்கிலத் தேதியல்லாது வளர்பிறை, தேய்பிறை என நட்சத்திரத்தோடு நாளினை கண்டு பிடித்திடுவர். புத்தாடை எடுத்து தந்து கைகளில் பழம்தாம்பூலம் கற்கண்டோடு பூக்கள் நிரப்பி ஆலயம் சென்று வா என்பதோடு ஆரம்பிக்கும் அன்றைய அகவைத் திருநாள். சிறு பிள்ளை ஆனாலும், வயோதிபம் ஆனாலும் இதுவே வழிவந்த மரபு.

கட்டுக் கரும்பை கசக்கிப் பிளிந்து சாறெடுத்து பாகு செய்து, பனை வெல்லத்தோடு திணை போன்ற சத்துணவு பல

சேர்த்து, நெய்யில் உருட்டிய லட்டு மினுமினுக்க பல்வகை பலகாரம் பழங்களோடு அகல் விளக்கில் நெய்யிட்டு தீபச்சுடர் எரிய, பெற்றோர் பெரியோரிடம் ஆசி பெற்று, வாழ்த்துப்பா ஒலிக்க வாழ்க வாழ்கவென நல்லதொரு நேர்மறையான அதிர்வலையோடு விழாவெடுத்து ஆரம்பிக்கும் அடுத்த அகவைக்கான நாட்கள்.

இனியாவது உலகம் எம்மையறிந்து பின்பற்றக் கூடிய உணர்வோடுடனான மரபுகளை நாமும் பின்பற்றி உலகுக்கும் சொல்லிக் கொடுப்போம். அகவைகள் பல கண்டு பல்லாண்டு வாழ்க!







விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# இலங்கை நாடகப் பள்ளியின் சர்வதேச இணையவழி அரங்கியல் கருத்தரங்கு 2020 – 2021

நாடகப்பள்ளியின் நான்காவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சர்வதேச அரங்கியல் கருத்தரங்கினை பா.நிரோஷன் Zoom செயலியினூடாக முன்னெடுத்திருந்தார். ‘அறிந்தவற்றையும் அனுபவத்தையும் கூறுவோம், அறியாதவற்றை செவிமடுப்போம்’ என்ற அரங்க சிந்தனையில் ஈழத்தில் அரங்கியல் துறையில்


பா.நிரோஷன்

பணியாற்றிய மூத்த அரங்கவியளாளர்கள் பலரை இணைத்து வாரம் ஒரு கருத்தரங்காக சிறப்பாக நடைபெற்றது. இக்கருத்தரங்கு பற்றி நாடகப்பள்ளி இயக்குநர் பா.நிரோஷன் கூறுகையில்;

‘கடந்த காலங்களில் அர்ப்பணிப்புடன் அரங்கப்பணியாற்றிய பல தமிழ் நாடக ஆளுமைகளை நாங்கள் மறந்து, அறியாமல் போனோம். அவர்கள் சார்ந்த அரங்கியல் விடயங்களை அறியச் செய்ய வேண்டி உலகெங்கும் உள்ள தமிழ் நாடக ஆளுமைகளை இணைத்து வாரம் ஒரு அரங்கியல் கருத்தரங்காக 18.12.2020 முதல் நடத்தினேன். அ.தாசீசியஸ், க.பாலேந்திரா, மாவை நித்தியானந்தன், இளைய பத்மநாதன், சி.மௌனகுரு போன்ற மூத்த ஆளுமைகள் இதில் பங்குபற்றினர்.எமது சிந்தனையை பரவலாக்கியதில் பெருமகிழ்ச்சி.’

அவர் கூறியது போன்று அர்ப்பணிப்புடன் பணியாற்றிய பலரை நாம் மறந்து போனது வருந்தத்தக்கது. அத்தவறினை இனிவரும் இளந் தலைமுறையினர் செய்துவிடக்கூடாது. தற்போது அரங்கியல் துறைக்குள் இயங்கி வரும் இளந்தலை முறையினருக்கு மூத்த அரங்கியல் ஆளுமைகளின் அனுபவங்களும், திறன்களும் கடத்தப்படுகின்ற போது அது அவர்களை மேலும் வளப்படுத்தும் என்ற பா.நிரோஷனின் சிந்தனை போற்றுதற்குரியது.

மூத்த நாடக ஆளுமைகள் பலரின் சில செயற்பாடுகளை செவிவழியாகவும், பாடத்திட்டம் ஊடாகவுமே அறிந்து வந்தவர்களுக்கு அந்த ஆளுமைகளுடனேயே நேரடியாக உரையாடுவதற்கும் அவர்களின் செயற்பாடுகளை நேரடியாக முழுமையாக அறிந்து கொள்ளவும் இக்கருந்தரங்கு உதவியதாக பலர் தெரிவித்தனர். பாடசாலை மாணவர்கள் முதல் பல்கலைக்கழக விரிவுரையாளர் வரை இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர். மூத்த ஆளுமைகளின்


அ.தாசீசியஸ்


சி.மௌனகுரு


க.பாலேந்திரா


மாவை நித்தியானந்தன்


இளைய பத்மநாதன்

விடுபட்டு போன பக்கங்களையும் அவர்களிடமிருந்தே கேட்டு அறிந்து கொண்டனர். ஈழத்தமிழர் பரந்து வாழ்கின்ற அனைத்து நாடுகளில் இருந்தும் பலர் இக்கருத்தரங்கில் பங்குகொண்டனர்.. ஈழத்தமிழ் நாடக வரலாற்றில் முதன்முறையாக அனைத்து ஆளுமைகளை இணைத்து செய்யப்பட்ட முதல் சர்வதேச இணையவழி கருத்தரங்காக இது பதிவாகிறது.

இக்கருத்தரங்கின் பின் ‘‘ஈழ நாடக வரலாறு’’ சார்ந்த பதிவுகள் கேள்விக்குரியதாக்கப்படுள்ள அதேவேளை சரியான, முழுமையான நாடக வரலாற்றை எழுத வேண்டும் என்பதனையும் வலியுறுத்துகின்றது. துறைசார்ந் தவர்கள் இதனை கருத்தில் கொள்வார்கள் என்று நம்புவோம்.

பா.நிரோஷன் அவர்கள் குறுகிய காலத்தில் சர்வதேசமெங்கும் உள்ள மூத்த அரங்கியளாளர்களை இணைந்து சர்வதேச ரீதியில் அரங்கியல் கருத்தரங்கினை நடாத்துவதென்பது இலகுவான காரியமன்று. அவரின் அர்ப்பணிப்பு மிக்க செயலியக்கமும், தொடர் அரங்கியல் செயற்பாடும் தான் அதனை நடாத்தி முடித்திருக்கின்றது. இவர் ஏற்கனவே ஈழத்தில் முதல் முறையாக அரங்கியல் நூலகம் அமைக்கும் பணியை முன்னெடுத்து தொடர் முயற்சியால் அதில் வெற்றியும் பெற்றவர். வரும் இளம் கலைஞன் பா.நிரோஷன் அவர்களிற்கு நன்றிகளும் பாராட்டுகளும். ■


ம.அருட்சயா
புதுமுக மாணவி,
கிழக்குப் பல்கலைக்கழகம்

**ஜேர்மன் வாழ் எழுத்தாளர்களுக்கு வேண்டுகோள்**

விரைவில் வெளிவரவுள்ள


**‘படைப்பாளர்கள்’**

என்னும் நூலில் உங்கள் நூல் விபரம் மற்றும் ஆக்கதாரர்களின் விபரங்களையும் பதிவு செய்ய வேண்டும் என்ற முனைப்பில் ஈடுபட்டுள்ளோம்.

உங்கள் நூலாக்க விபரங்களைப் பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டுகின்றோம்.

குறிப்பு (ebook) ஆகவும் நூல் உருவில் வெளியிடப்படும்.
மேலதிக விபரங்களுக்கு
(germantamilwriter@outlook.com)

சு.பாக்கியநாதன்
0152 10378556
பி.எஸ்.இராஜகருணா
0176 31740702



**வெற்றிமணி திருமண சேவை**


மணமகள் தேவை

இந்து மதத்தைச் சேர்ந்த யேர்மனியில் பிறந்து கல்விகற்று (Machinenbau) என்ஜினியராக கடமையாற்றும் 30 வயது உடைய ஆண்மகனுக்கு யேர்மனியில் Nordrhein-Westfalen இல் மணமகள் தேவை.
பெற்றோர் மட்டும் தொடர்புகொள்ளவும்.
தொடர்பு இலக்கம்: 0175 850 1489

மணமகள், மணமகன் தேவைகளை பிரசுரிக்கலாம்.
3 தடவை பிரசுரிக்க குறைந்த கட்டணமே அறவிடப்படும்.

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது

**ஆசியா சமுத்திரம்**
**Asiatischer super markt**

R.Ragunathan
Deutschebank
IBAN: DE55 3907 0024 0474 1153 00
Bic: DEUTDEDB390
Email: mediajara@gmail.com
Handy: 01520 900 90 30

Parkhofstraße-101
41836 Hückelhoven
Tel: 02433 903282
Fax: 02433 903281


ஆசிய, ஆபிரிக்க மற்றும் இலங்கை, இந்திய பலசரக்குப் பொருட்கள், மரக்கறி வகைகள், கடல் உணவுவகைகள் அனைத்திற்கும் எம்மை நாடுங்கள்.

துரித பணமாற்றுச் சேவை
Hückelhoven



# இலக்கியத்தில் இவர்கள்... 12



கௌசி (யேர்மனி)

எழுதப்படாத சட்டங்கள், மனிதாபிமானங்கள், விட்டுக்கொடுப்புகள், பிறரை மதிக்கும் பண்புகள் போன்ற காரணங்களினால், பல அமைப்புகள், பல குடும்பங்கள், பல நண்பர்கள் காலவேறுபாடுகள் அற்று ஒன்றாக வாழுகின்றார்கள். ஆனால், ஒன்றாகவா வாழுகின்றார்கள்? என்ற கேள்வியுடன் இக்கட்டுரை ஆரம்பிக்கின்றது.

ஐந்து விரல்களும் ஒன்றாக இருப்பதில்லை என்று சொல்லுகின்றார்கள் ஒன்றாக இல்லை என்பதற்காக அதனை வெட்டி எறிந்துவிட முடியாது. அதனால், சமாளித்து சகித்துக் கொண்டு போக வேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது. ஒன்றை உயர்த்திப் பார்க்க ஆசைப்படுகின்றோம். வேண்டிய சக்தியை தாரை வார்க்கின்றோம். ஆனால், அங்கு ஒத்துழைப்புக்கள் கிடைக்கவில்லை என்றால், வைத்த பற்றும் இணைந்து பயணித்த அனுபவங்களும் எம்மை மௌனமாக வழிநடத்த அடுத்தவர் கண்களுக்கு ஒன்றாக வாழுகின்றோம். ஆனால், மனதால் ஒன்றாகவா வாழுகின்றோம்?

ஒரு குடும்பத்தில் கணவன் மனைவியிடையே கருத்து வேறுபாடுகள். கணவன் மனதுக்கு ஏற்ற மனையாளாக வாழ மனைவிக்குத் தெரியவில்லை. அவன் விருப்பு வெறுப்புகளுக்குத் தன்னை அர்ப்பணிக்கத் தெரியவில்லை. அவனைப் புரிந்து நடக்கத் தெரியாது போகத் தானும் வாழாது கணவனையும் மகிழ்ச்சியுடன் வாழ விடாது மனைவி வாழுகின்றாள். இதேபோல் மனைவியின் எண்ணங்களுக்கு மதிப்பளிக்கத் தெரியாத மனிதனாக கணவன் வாழுகின்ற பட்சத்தில் போட்டிபோட்டுப் போராட்ட வாழ்க்கையைக் காலம் முழுவதும் இருவரும் வாழ்கின்றனர். குடும்பத்தை வழிநடத்த புரிந்துணர்வுகளும் விட்டுக்கொடுப்புகளும் தேவை. பெற்றெடுத்த வாரிசுகளின் நலன், சமூகப் பார்வை போன்றவை எழுதப்படாத சட்டங்களாக இருக்க குடும்பங்கள் ஒன்றாகக் காட்சி தருகின்றன. ஒன்றாகவா வாழுகின்றார்கள்?

அக்கால இலக்கியங்களில் காணப்படும் இவ்வாறான நிலைமைகளை எமக்குக் கற்றுத் தந்திருக்கின்றன. பரத்தை ஒழுக்கம் நாடி கணவன் செல்கின்றான் என்று தெரிந்தும் மனைவி அவனுடன் ஒன்றாகவே வாழுகின்றாள். கணவனைப் பரத்தை வீட்டிற்குக் கூடையில் சுமந்து சென்ற மனைவியின் கதை எமக்கு எதைப் போதிக்கின்றது? கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் என்னும் தத்துவத்தையா? இல்லை. மனதை அடக்கிக் கணவன் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதையா? வாழ வழியில்லாத பேதையர்கள் வாழ்க்கையில் ஒன்றாக இல்லை ஒன்றாகவே வாழுகின்றார்கள் என்பதையா?

மந்தப் பரத்தையோடும் வருமொழியாரோடும் சேர்ந்து கோவலன் தன் பொருள் இழந்தான். மாதவி சேர்க்கையின் பின் கோவலன் வணிகர் கடமையாகிய பொருளீட்டல் தொழிலைச் சரிவரச் செய்யவில்லை. மன்னர்களுக்கே கடன் கொடுக்கக் கூடிய தனவந்தனாக இருந்த கோவலன் தன்னுடைய செல்வங்களையெல்லாம் இழக்கின்றான்.




## ஒன்றாக வாழுகின்றோம் ஒன்றாகவா வாழுகின்றோம்

> ‘‘பாடமை சேக்கையுட்
> புக்குத் தன்பைந்தொடி
> வாடிய மேனி
> வருத்தங்கண் டியாவுஞ்
> சலம்புணர் கொள்கைச்
> சலதியொ டாடிக்
> குலந்தரு வான்பொருட்
> குன்றந் தொலைந்த
> இலம்பாடு நாணுத்
> தருமெனக் கென்ன’’

என்று கூறிக் கோவலன் கண்ணகியைச் சரண்புகுகின்றான். இத்தனையும் அறிந்திருந்தும் கண்ணகி கோவலனுக்காக வாழ்ந்தாள். கோவலனைப் பிரிந்த வருத்தம் இருந்தாலும் அறச் செயல் செய்ய வேண்டும் என்ற காரணத்தினால், வாழ்ந்தாள். அக்காலப் பெண்கள் அறம் செய்வதாக இருந்தாலும் கணவன் மனைவியுடன் இணைந்துதான் செய்யவேண்டும் என்ற எழுதப்படாத சட்டம் இருந்தது. இராமனும் சீதையும் வனவாசம் செய்த கால கட்டத்தில் இராமன் இல்லாத சமயத்திலே அறச்செயலில் ஈடுபட்ட காரணத்தினால், இராவணனால் சீதை கடத்தப்பட்டாள் என்று உரைக்கிறது இராமாயணக் காட்சி.

காரைக்காலம்மையார் சிறந்த இலக்கியவாதியாக இருந்த போதிலும் கணவன் பரமதத்தனுடன் ஒன்றாக வாழ்ந்தாள். சிவபக்தர்களைப் போற்றும் பண்புள்ளம் கொண்ட காரைக்காலம்மையார் மாங்கனி விடயத்தில் கணவன் அறியாது சிவபக்தனுக்கு உணவளித்த அறச்செயலை மறைக்க இறைவனை வேண்டி மாங்கனி பெற்றாள். பரமதத்தனுடன் வாழ்ந்தாலும் மனதளவில் அவள் வாழ்க்கை எதனை நாடியது? ஒன்றாகவே வாழ்ந்தாள். ஆனால், ஒன்றாகவா வாழ்ந்தாள்?

புத்தரைத் திருமணம் செய்த போதே தன்னை விட்டுப் பிரியப் போகின்ற ஒரு ஞானியுடனேயே நான் குடும்பம் நடத்துகின்றேன் என்று யசோதரை தெரிந்துதான் புத்தருடன் வாழ்ந்தாள். புத்தரை குடும்ப வாழ்க்கைக்குள் அமிழ்த்திவிட முயன்றாள். ஆனால், புத்தர் ஒன்றாக வாழ்ந்தார். வாழ்க்கை முழுவதும் துறவற சிந்தனையுடன் வாழ்ந்தார். ஒன்றாகவா வாழ்ந்தார்? இறுதியில் 29 வயதில் யசோதரையை விட்டு சென்றார்.

நிடத நாட்டு மன்னன் நளனை கலி பிடித்து ஆட்டுகின்றது. அரசாட்சி துறந்து தமயந்தியுடன் கானகம் புகுந்தான். ஒன்றாக வாழந்தான். ஆனால், தன்னோடு தன் மனைவி தமயந்தி கானகத்தில் அவலங்களை அனுபவிப்பதை நாளும் பொழுதும் அவதானித்தான். கலியின் சூட்சியினால் தன் ஆடை இழந்த வேளையிலே தன் மனைவியின் ஆடைக்குள் தன் மானத்தைக் காப்பாற்றினான். இதனால், நடுநிசியில் ஆடையைக் கிழித்து இரவில் தனியே அவளை விட்டுச் சென்றான்.

> ‘‘கானகத்துக் காதலியைக்
> காரிருளில் கைவிட்டுப்
> போனதுவும் வேந்தர்க்குப்
> போதுமோ – என்று
> சாற்றினான் அந்தவுரை தார்
> வேந்தன் தன்செவியில்
> ஏற்றினான் வந்தான் எதிர்’’

தான் இல்லாவிட்டால், தன் மனைவி தன்னுடைய தந்தையிடம் சென்றுவிடுவாள் என்று எண்ணம் கொண்டான். இங்கு கானகத்தில் நளன் தமயந்தியின் அர்ப்பணிப்பு எடுத்துக் காட்டப்படுகின்றது. இராமகிருஸ்ண பரஹம்ஸர் தன் மனைவி சாரதா அம்மையாருடன் ஒன்றாக வாழ்ந்தார். காமத்தின் சாயல் கூட இல்லாது இருவரும் ஒன்றாகவே வாழ்ந்தார்கள்.

இவற்றைவிட மன்னன் தலைமையில் அவைக்களப் புலவர்களாக கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி,

26 ஆம் பக்கம் பார்க்க...

‘சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்”



Aadaa Finance GmbH
Dr. (h.c) Nageswaran Arulrasa D.Litt (CEO)
Eidgenössische finanzmarktaufsicht Nr.35302
Fachmann Für Versicherung & Vorsorge
Hauptstrasse 54, 6015 Luzern, Switzerland
079 8000 100 | arulnages@yahoo.com
aaDaa Finance 0798000100
finma : 34598
cicero : 25605



19 ஆம் பக்கத் தொடர்ச்சி...

அதுதன்னைத்தானே சுத்தம் செய்து கொள்கிறது. இந்தக் கண்ணாடிகள் தற்போது உலகில் பல்வேறு இடங்களில்பாவனையில் உள்ளது.

உதாரணமாக ஜப்பான் நாட்டில் காணப்படும் ஒரு விமான நிலையத்தின் கட்டடத்தின்அனைத்து ஜன்னல்களும் இந்த தைட்டானியம் டையாக்சைட் சேர்க்கப்பட்ட கண்ணாடிகள் ஆகும்.

நானோ ஆராய்ச்சியில் உள்ள வியப்பான விஷயம் என்ன தெரியுமா? இந்த ஆராய்ச்சி பல்வேறு துறைகளில் நடாத்தப் பட்டு வருகின்றது. அதில் மருத்துவமும் ஒன்றாகும். உடல் நிலை சரியில்லாமல் இருந்தால் தற்போது நாம்என்ன செய்வோம்? உடனடியாக மருத்துவரிடம் சென்று அவர் தரும் மருந்து மாத்திரைகளைச் சாப்பிட்டு விட்டு, நோய் போய்விடும் என்கின்ற நம்பிக்கையில் இருப்போம், சரி தானே? ஆனால், இன்னும் ஒரு சில ஆண்டுகளில் இந்த நிலைமை முற்றிலும் மாறி விடும். உங்கள் மருத்துவர் உங்களுக்கு மருந்து மாத்திரை ஒன்றும் தரவே மாட்டார்! அவர் நானோ தானியங்கி (Nano Robot) என்று அழைக்கப்படும் மிக மிக நுண்ணியமான எந்திரங்களை உங்கள் உடலுக்குள் அனுப்பிவிடுவார். இந்த நானோ தானியங்கிகள் உங்களது இரத்தக் குழாய்களூடாகச் சென்று உங்கள் நோய்க்குக் காரணமாக இருக்கும் பாக்டீரியா மற்றும் வைரஸ்களைக் கண்டு பிடித்து அழித்து விடும். அது மட்டும் இல்லை! புற்றுநோய், மாரடைப்பு, சிறுநீரக கற்கள், எய்ட்ஸ் போன்ற எண்ணற்ற நோய்களையும், ஏன் இன்று வரை எவ்விதமான சிகிச்சை முறைகளுமே இல்லாத நோய்களையும் கூட குணப்படுத்த இந்த நானோ தானியங்கிகள் உதவும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள்.

# நானோ அறிவியல்- கண்ணுக்குத் தெரியாத தொழில்நுட்பம்

# உடலுக்குள் சென்று நோய் தீர்க்கும் கருவி!

### அதன் பிரம்மாண்டமான விளைவுகளும்



ஆனால், இதில் உள்ள அதிசயம் என்ன தெரியுமா? ஒரு நானோ தானியங்கியின் அளவு வெறும் 0.000000001 மீட்டர் மட்டுமே தான் இருக்கும்! ஒரு தலைமுடியின் அகலத்துடன் ஒரு நானோ தானியங்கியை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, ஒரு நானோ தானியங்கி சுமார் 100,000 மடங்கு சிறிதாக இருக்கும்! எனவே, நமது கண்களாலேபார்க்கமுடியாத இந்த எந்திரங்கள் மனிதனின் உயிரைக் காப்பாற்றப் போகின்றன என்பதைக் கேட்கவேஅதிசயமாகத் தானே இருக்கிறது?

மருத்துவத் துறையை முற்றிலும் மாற்ற இருக்கும் இந்த நானோ தொழில்நுட்பம், நாம் பயணிக்கும்முறையையும்கூட மாற்ற இருக்கின்றது, அது எப்படித் தெரியுமா? எதிர்காலத்தில் விடுமுறைக்கு விண்வெளிக்கும் போகச் சிந்திப்போம் என்று இன்றைய விஞ்ஞானிகள்கூறுகின்றார்கள். ராக்கெட்டில் பயணிப்பதில்லை! இதற்கென்றே ஒரு உயர்த்தியை (elevator) அமைக்க இருக்கின்றார்கள்! இந்த உயர்த்தியுடன் பூமியின் தரையில் இருந்து 80,000 கிலோமீட்டருக்குமேல் நோக்கிச் சென்று, மறுபடியும் புவியை நோக்கி வரலாம்.

நீண்ட காலமாக நியூட்டனின் இயக்க விதிகளின் அடிப்படையில் இந்த உயர்த்தியை இயக்க உதவும் கேபிள்கள் அறுந்துவிடும் என உறுதியாகச் சொல்லிவிட்டார்கள். ஆனால், நானோ ஆராய்ச்சிப் படி கார்பன் நானோகுழாய்களின் (Carbon nanotubes) உதவியுடன் இந்தத் திட்டத்தை செயல்படுத்தமுடியும் என்று ஆராய்ச்சியாளர்களுக்குத் தெரியவந்தது. இவை கலப்புலோகம் ஆகிய உருக்கைவிட 100 மடங்கு பலமாகவும் அதே நேரத்தில் ஆறு மடங்கு கனம் குறைவாகவும் இருக்கின்றன. தற்போது விஞ்ஞானிகளால் ஒரு சில செண்டிமீட்டர் கார்பன் நானோகுழாய்களைத் தான் உருவாக்க முடிந்தது. ஆனால், 2070 ஆம் ஆண்டிற்குப் பின்பு, இப்படி ஒரு உயர்த்தியை நிச்சயம் உருவாக்க முடியும் என்பதைக் கூறியிருக்கிறார்கள். எனவே, வா மச்சான் விண்வெளிக்குச் சென்று ஒரு காப்பி குடித்துவிட்டுவருவோம் என்று எதிர்காலங்களில் கேட்கத்தான் போகிறார்கள். ஆனால், நாங்களும் கேட்பதற்கு 2070ம் ஆண்டில் இருப்போமா என்று தான் தெரியவில்லை. ஒரு திரைப்படம் வர முன் வெளியிடப்படும் முன்னோட்டம் போல் தான் நானோ அறிவியலின் இன்றைய இந்தப் புதுமையான நவீன கண்டுபிடிப்புகளும் கூட.

கட்டுரை பற்றிய அபிப்பிராயத்தையும் எனக்குக் கண்டிப்பாக எனது முகநூல் பக்கத்தில் (www.facebook.com/ scinirosh)




11.07.2021 ஞாயிற்றுக்கிழமை

யேர்மனியில் திருவருள் புரியும் அன்னை ஹம் ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயத் தேர்த் திருவிழா 11.07.2021 ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடைபெறவுள்ளது.

அடியார்கள் அனைவரும் அன்னையின் திருவருள் பெற்றுச் செல்லக் காலம் கனிந்துள்ளது. யேர்மனி அரசின் விதிமுறைகளுக்கு அமைய அடியவர்கள் நடந்து தேர்த்திருவிழாவை சிறப்பித்து அருள் பெற்று ஏகுமாறு வேண்டுகிறோம்.

**இவ்வண்ணம்; ஆலய ஆதின கர்த்தா**
**Siegenbeck Str 4-5**
**59071 Hamm-Germany**
**Te-l: 02388 302 223**




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.


அ.வியாசன்
விடுகை வருட மாணவன்
இந்து நாகரிகத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# இந்து ஆலயங்களில் தொல்லியல் அகழ்வாராய்ச்சியும் இன அழிப்பும்









வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொல்லியல் திணைக்களங்கள் அகழ்வாராய்ச்சி என்ற பெயரில் புராதான இந்து ஆலயங்கள், தமிழர் புடராதான சின்னங்கள் காணப்படுகின்ற இடங்களில் மறைமுகமாக இந்த அகழ்வாராய்ச்சி என்னும் பெயரோடு மேற்கொள்ளுகின்ற திட்டங்கள் அனைத்தும் இராணுவத்தின் துணையோடு நடத்தப்படுகின்ற திட்டமிட்ட இராணுவ பயங்கரவாத செயற்பா



கன்னியா பிள்ளையார்

டுகள் என்றே நாம் பார்க்க வேண்டியுள்ளது. யுத்தம் நிறைவடைந்த காலத்திற்கு பின்னர் சைவ சமயத்தின் குறியீடுகளாகவும் வழிபாட்டுதலங்களாகவும் விளங்கும் இடங்களை குறிவைத்து பௌத்த மதம் சார்ந்த ஸ்தலங்களாக மாற்றுகின்ற செயற்பாடுகள் நடைபெற்று கொண்டுக் கொண்டு இருக்கின்றன.

குருந்தூர் மலை ஆதிசிவன் ஐயனார் கோவில், உருத்திரபுரம் சிவன் கோயில், வவுனியா வெடுக்குநறி ஆதிசிவன் ஆலயம், கன்னிய வெந்நீரூற்று பிள்ளையார் கோவில் போன்ற இந்து ஆலயங்கிளில் நேரடியாக தொல்லியல் திணைக் களங்களில் செல்வாக்கினால் மத அடையாளங்கள் அழிக்கப்படுகின்ற செயற்பாடுகளை கண்டுகொள்ள கூடியதாக உள்ளது. இங்கு கண்டுபிடிக்கப்பட்ட எச்சங்கள் 2300 ஆண்டுகாலம் பழமை வாயந்தது



குருந்தூர் மலை ஆதிசிவன் ஐயனார் கோவில்

என போரசிரியர். சி.பத்மநாதன் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இக் குருந்தூர் மலையில் பல தொல்லியல் ஆதாரங்கள் காணப்படுகின்றன என அதில் சிங்கள பௌத்த சின்னங்கள் காணப்படுகின்றன என தொல்லியல் திணைக்களம் கூறிக்கொண்டு தொல்பொருள் அகழ்வாராய்ச்சி என்ற பெயரில் தூண்களையும், கற்களையும், வைத்துக்கொண்டு அங்கு புராதன விகாரைகள் இருந்தாக கூறி சிவன், ஐயனாரின் சூலம் உடைக்கப்பட்டதோடு, வழிபாட்டு எச்சங்களும் எரிக்கப்பட்டு புதிய விகாரைகள் அமைக்கும் பணிகளை இராணுவ அரச இயந்திரத்தை கொண்டு தொல்லியல் திணைக் களமும் இவ்வாறன இன அழிப்பினை மேற்கொண்டு வருகின்றது. சிங்கள பௌத்த அடையாளச் சின்னங்களை நிறுவி தமிழர் பிரதேசங்களில் ஆக்கிரமிக்கும் முயற்சியில் இவ் அரசு செயல்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் வரலாற்று பழமை வாய்ந்த் உருத்திரபுரீஸ்வரர் சிவன் கோயில் உருத்திரபுரம் பகுதியில் அமைந்துள்ளது, திராவிடகட்டடக்கலைமரபில் அமையப் பெற்ற இவ்வாலயத்தில் காணப்படும் சதுர ஆவுடை இலிங்கம் பல்லாயிரம் ஆண்டு பழமையானது. இவ்வாலயம் பற்றிய வரலாற்று தகவல்களை தொல்லியல் [கட்டட இடிபாடுகள், சுடுமண் உருவங்கள், செங்கல் கட்டுமானம்], இலக்கிய குறிப்புக்கள், வாய்மொழிசெய்திகள், ஐதீகக்கதைகள் ஊடாகவும் அறியலாம். இவ் கோயில் தொல்லியல் திணைகளத்தினால் அகழ்வாராய்ச்சி இடம்பெற இருந்த வேளை மக்கள் போரட்டத்தினால் இடைநிறுத்தியது. ஆனாலும் இவ்விடத்தில் தொல்லியல் திணைக்களத்தினால் ஆய்வுகள் மேற்கொள்ளப்



உருத்திரபுரம் சிவன்கோவில்

படுகின்ற போது இங்கு ஏதாவது பௌத்த வரலாற்று சான்றுதல்கள் கிடைக்கபெற்றல் இந்த இடத்தில் புதிய விகாரை ஒன்று அமைப்பதற்கு வாய்ப்புகள் அதிகம் எனவும் தெரிவிக்கப்பட்டது. இவ்வாறான இன அழிப்பு விடயத்தில் மக்கள், அரசியற் தலைவர்கள் கண்ணும் கருத்துடன் செயற்படவேண்டும். பௌத்த மதத்தினை தமிழர் தேசங்களில்

26 ஆம் பக்கம் பார்க்க...




Dear customers , Warehouse office moved to new location. Address below,
Unit K5, Metropolitan Park, Field Way Greenford ,Middx UB6 8UN

விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# இந்து ஆலயங்களில் தோல்லியல் அகழ்வாராய்ச்சியும் இன அழிப்பும்

25 ஆம் பக்கத் தொடர்ச்சி...



அடையாளபடுத்தி தமிழர்களின் வரலாறுகளை திரிவுபடுத்தும் முயற்சிகளே முன்னேடுக்கப்படுகின்றன. இதன் கருவியாக தொல்லியல் திணைக்களம் பயன்படுத்துவதை காணலாம்.

வவுனியா வெடுக்குநாறி ஆதிசிவன் மலைக்கோயில் 2009 யுத்தத்திற்கு முன்னரே இந்துக்கள் இங்கு சென்று சுகந்திரமாக வழிபாடுகளில் இடுபட்டு வந்தபோதிலும் யுத்தத்திற்குப் பின்னர் சில பேரினவாதிகள் பௌத்த தலமாக மாற்றுவதற்கான முயற்சியில் ஈடுபட்ட வேளையில் அப்பகுதி மக்கள் அதற்கு எதிராக புனரமைப்பு வேலைகளில் ஈடுபட்டனர். அதன் போது அவ்வாலயத்திற்கு சிவலிங்கம், பிள்ளையார், போன்ற விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டது. பிற்பட்ட காலங்களில் ஏனைய தெய்வங்கள் பிரதி;டை செய்யப்பட்டது. 2018 ஆம் ஆண்டு தொல்லியல் திணைக்களம் மற்றும் வனவளத் திணைக்களத்தினர் வெடுக்குநாறிமலைக்கு மக்கள் சென்று வழிபாடுகளை மேற்கொள்ளத் தடை விதித்திருந்தனர். ஆனால் கிராமத்து மக்களின் எதிர்ப்பினால் இத்தடையினை தொல்பொருள் திணைக்களத்திளத்தின் அனுமதியுடன் நெடுக்கேணி காவற்துறையினர் தற்காலிகமாக நீக்கி வழிபாடுகளை மட்டும் மேற்கொள்ள அனுமதித்தனர். ஆனாலும் கோயிலைப் புனரமைக்கவோ, கிணறு, வெட்டவோ, மலைக்கு ஏறுவதற்கான படியமைக்கவோ, புதிய கட்டங்களை அமைக்கவோ அனுமதி மறுக்கப்பட்டது. 2019 காலப்பகுதியில் வெடுக்குநாறிமலை ஆய்வு செய்யும் நோக்கில் கொழும்பிலிருந்து வருகை தந்து தொல்லியல் நிபுணர்கள், மாவட்ட தொல்லியத் திணைக்களத்தினர், காவல்துறையினர், இராணுவத்தினர் போன்றோர் வருகை தந்து ஆய்வினை மேற்கொண்டனர் இவ்வாறு மத சுகந்திரத்தில் தலையீடு செய்து தமிழர் வழிபாட்டு தலங்கள் மீது அதிகாரங்களை பிரயோகித்து இவ்வாறன இன அழிப்பினை மேற்கொள்ளுகின்றனர். வெடுக்குநாறி பிரச்சினை நீண்டகாலமாக பிரச்சினையாக செல்கிறது. வன்னிப்பிராந்தியத்தில எல்லைக்கிராமங்கள் பறிபோவதைப் போன்று வெடுக்குநாறி மலை, வாவெட்டிமலை, குருந்தூர் மலை, கும்பகர்ணமலை, ஓதியமலை போன்ற பகுதிகளும் பௌத்த மயமாக்கபடுகின்ற நிலை காணப்படுகின்றது.

திருகோணமலை – கன்னியா வெந்நீருற்று பிள்ளையார் இருந்த இடத்தில் பௌத்த விகாரையொன்றை கட்டுவதற்கான திட்டமிட முன்னேடுக்கப்பட்டது மக்கள் போரட்டடங்களையும் வழிபாடுகளையும் மேற்கொள்வதற்கும் தடைவிதிக்கப்பட்டதுடன் பெரும்பான்மையினக் சேர்ந்தவர்கள் தென்கயிலை ஆதீனம் அகத்தியர் அடிகளார் மீது கொதிநீர் ஊற்றினர். இவ்வாறான வன்மையான செயல்கள் இடம்பெற்றன. பின்னர் கோயில் நிர்வாகத்தினால் வழக்கல் தாக்கல் செய்யபட்டதலும் அரசியல் தலைமைகள் இவ்விடயத்தில் அக்கறையுடன் செயற்பட்டதால் வழக்கில் இணக்கம் காணப்பட்டு தற்போது பிள்ளையார் கோவில் அமைப்பதற்கு பணிகள் இடம் பெற்றுக் கொண்டு இருக்கின்றது. இவ்வாறன சட்டரீதியான அனுமுறைகளை எம்மவர்கள் சரியாக பயன்படுத்தினால் வெற்றி கிடைக்கும் என்பதற்கு சான்றாகும்.

யுத்தத்திற்கு பின்னரான இனஅழிப்பு விடயத்தில் தமிழ் தேசியம் பேசுகின்ற கட்சிகள் தேர்தல் அரசியல் அப்பால் தமிழர் சார்ந்த மரபுரிமை பாதுகாப்பதற்கு ஒன்றுபட்டு செயற்படவேண்டும். இளைஞர்கள் மத்தியில் எமதுபாரம் பாரிய சின்னங்கள் தொடர்பாக தெளிபடுத்தி அடுத்த தலைமுறையினருக்கு கடத்தவேண்டும். தமிழர் தாயகத்தில் காணப்படும் மரபுரிமை பாதுகாக்கும் அமைப்புகள் உருவாக்கபட்டு மக்கள் மத்தியில் விழிர்புணர்வுகளை எற்படுத்த வேண்டும்.

# 'என்ன வீட்டில் ஏதாவது நல்ல செய்தி உண்டா?"

07 ஆம் பக்கத் தொடர்ச்சி...

மருந்துகள் பற்றியும் நோயின் தன்மை பற்றியும் கூறுவதைவிட குறிப்பிட்ட ஒரு மருத்துவர் பற்றிய புகழார [விளம்பர] நிகழ்ச்சியாகவே அமைந்திருக்கும். பேட்டி எடுப்பவர் பல நிமிடங்கள் மாறி மாறி மருத்துவரின் கைராசி பற்றியும், திறமைகள் பற்றியும் புகழ் பாடிக்கொண்டிருப்பார். தொலைக்காட்சிகளில் மட்டுமன்றி பத்திரிகைகள், வார இதழ்கள் எல்லாவற்றிலும் இதுபோன்ற விளம்பரங்கள் தொடர்வதைக்காணலாம்! கருப்பை சுத்திகரிப்பு ஆரம்பித்து விந்து உயிர் அணுக்களின் எண்ணிக்கையினை அதிகரிக்க மருந்து மாத்திரை , சினைமுட்டைக்கரு என பல வழிகளில் தம்பதியர் பல லட்சங்களை செலவழிக்கவேண்டியுள்ளது .மருத்துவத்தின் பிரகாரம் இவையாவும் அவசியமான குறைபாடுடையவர்கள் மேற்கொள்ளவேண்டிய சிகிச்சை முறைகள் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. ஆனால் ,இந்த சிகிச்சைகளுக்கான கட்டணங்களும் அவர்கள் பரிந்துரைக்கும் மருந்து மாத்திரைகளுக்கும் அதிக விலைகொடுத்தாகவேண்டும். இவ்வகையான மருந்து மாத்திரைகளுக்கான உற்பத்தி செலவுக்கும் அதன் விற்பனை விலைக்கும் இடையேயான இடைவெளி மலைக்கும் மடுவுக்கும் உள்ள இடைவெளி . அந்த அளவுக்கு லாபம் பார்க்க விளைகின்றன மருந்து தயாரிப்பு நிறுவனங்கள் .

இன்றெல்லாம் ஆண்மைக் குறைவு, குழந்தையின்மைக்கான சிகிச்சை என்ற பெயரில் போலி மருத்துவர் பலர் இருப்பதால், சிகிச்சை பெற்றுக்கொள்ளப்போகும் மருத்துவமனை தரமானதா? சிகிச்சையளிக்கப்போகிறவர் தகுதி பெற்ற மருத்துவரான என்பதை மிக மிக அவதானமாக பரிசீலனை செய்துகொள்ளவது அவசியமானது. சரி அப்படியே தரமான ஓர் மருத்துவமனையை சென்றடைந்துவிட்டாலும், ஒரே நாளில் பிரச்சினையை தீர்க்க மருத்துவர் ஒன்றும் கடவுளோ, மேஜிக் மேனோ அல்ல என்பதையும் தம்பதியர் புரிந்துகொள்ள வேண்டும். கணவன் மனைவி இருவர்க்கும் என்ன பிரச்சினை என்பதை தெரிந்து கொண்டு அதற்கேற்றவாறு சிகிச்சைகளை தொடர்வதற்கு மருத்துவருக்கும் கொஞ்சம் அவகாசம் தேவை . மருத்துவர்மீது மொத்த அழுத்தத்தையும் திணித்துவிட்டு , இந்த சோதனை, அடுத்து இன்னொருவரிடத்தில் மற்றொரு சோதனை, மற்றுமொரு மருத்துவமனை என ஓடிக் கொண்டே இருப்பதாலோ, பதற்றப்படுவதாலோ நாம் எதிர்பார்க்கின்ற பலன் கிடைக்கப்போவதில்லை . குழந்தை என்பது மிகவும் சந்தோசமான நம் வாழ்க்கையையே அர்த்தப்படுத்தப்போகும் அழகான விஷயம் . அந்த நல்ல விசயதிற்காக கொஞ்சம் காத்திருந்தால் தவறில்லை அல்லவா ?

எது எவ்வாறாயினும், குழந்தைப் பேறு என்பது ஒரு பெண் கடந்து வரும் குறுகிய காலக்கட்டம் மட்டுமே. இயற்கை அந்த வாய்ப்பை அவளுக்கு தந்திருக்கிறது. வாழ்க்கையின் ஒரு பகுதி மட்டுமே அது. அதுவே அவளுடைய முழுமையான வாழ்க்கையல்ல. அது சாத்தியப்படாததற்காக அவள் கூச்சப்படவோ எவ்வித அவதூறுகளுக்கும் மனம் புழுங்கவோ அவசியமேயில்லை.



# ஒன்றாக வாழுகின்றோம் ஒன்றாகவா வாழுகின்றோம்

23 ஆம் பக்கத் தொடர்ச்சி...

ஔவையார் சீத்தலைச் சாத்தனார் போன்ற புலவர்கள் ஒன்றாகவே அவையிலே வீற்றிருந்தார்கள். ஆனால், ஒன்றாகவா இருந்தார்கள். ஒவ்வொருவருக்கும் இடையில் புலமைப் போட்டிகளும் அரண்மனை பஞ்சாயத்துகளும் தொடர்ந்து கொண்டுதான் இருந்தன.

தவறு கண்ட இடத்தில் எழுத்தாணியால் தன் தலையிலே குத்திக்கொள்ளும் சீத்தலைச் சாத்தனார் போலே எத்தனையோ பேர் பொருந்தாத உறவுக்குள், அமைப்புக்குள், குடும்ப வாழ்க்கைக்குள் புகுந்து தம்மைத்தாமே காயப்படுத்திக் கொண்டு ஒன்றாகவே வாழுகின்றார்கள். இது எழுதப்படாத சட்டம்.








விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# போட்டு குறும்படம்!

## புட்டு புட்டுச் சொல்லும் செய்தி என்ன!

நமது கலாசாரமும் பண்பாடும் ஒரு தலைப்பட்சமானவை என்பதை உணரும் பொழுது, அவை தொடர்பில் கேள்வி கேட்கவும் மாற்றவும் முன்னிற்க வேண்டியது எமது கடமை. ஏன் எதற்காக என்று தெரியாமல் யாரோ செய்தார்கள் என்பதற்காக சில சம்பிரதாயங்களையும் சடங்குகளையும் அனுட்டானங்களையும் நாம் செய்து கொண்டிருக்கிறோம்.

‘பொட்டு’ ஒரு பெண்ணின் அழகிற்கு மேலும் மெருகூட்டும் அடையாளம், பிறந்தது முதல் அவள் அணிந்து வரும் அணிகலனாக இருப்பதனால் தமிழ்ப் பெண்களுக்கு பொட்டின் மீது அளவுகடந்த விருப்பும் பற்றும் இருந்துகொண்டே இருக்கிறது . ஒரு பெண் தன்னைத் தானே வெகுவாக ரசிப்பவள், நேசிப்பவள், கொண்டாடுபவள், அழகாய் இருக்க ஆசைப்படுபவள். இந்த ஆசையை ஓர் மார்க்கமாகப் பயன்படுத்தி ‘பொட்டு’ எனும் எண்ணக்கருவிற்குள் அவளைச் சிறைப்பிடித்து வைத்திருக்கிறார்கள் என்பதை அவள் அறிய மறுக்கிறாள்.

திருமணத்தில் அணிவிக்கப்படும் குங்குமம் கணவன் இழந்ததும் அழிக்கப்படுகிறது. ‘அந்தக் காலம் மலை ஏறிப் போய் விட்டது’ என்று நீங்கள் சொல்கிறீர்களா? இல்லை, இன்றும் இலங்கையில் தமிழ் மக்கள் வசிக்கும் கிராமப்பகுதிகளில் கணவனை இழந்த பெண்ணிற்கு வெள்ளைப் புடவை அணிவித்து இறந்த கணவனின் கையால் பொட்டழிப்பது வரை நடந்து கொண்டே இருக்கிறது. கணவனை இழந்த பெண்களை பொது இடங்களில் அவமரியாதை செய்தல்,



நவயுகா
(இயக்குநர், பொட்டு)

அவர்கள், இந்த சமூகக் கட்டுப்பாடுகளைத் தகர்த்தெறிந்து சுயமாக இயங்க முற்படும் பொழுது அவர்களைப் பற்றி அவதூறாகப் பேசுதல், அவமரியாதை செய்தல், பொது இடங்களில் நிராகரித்தல் போன்றன நகரங்களில் கூட இன்றும் மிக அதிகளவாகக் காணக்கூடிய மோசமான அடி முட்டாள்த்தனமான நடத்தைகளாக இருக்கின்றன. மனைவியை இழந்த ஆண்களைக் கூட அதிஷ்டமற்றவர்களாகக் கருதி நிராகரிக்கின்றதையும் காண முடிகிறது.

பெண்களில் சிலர் தடைகளை உடைத்தெறிந்து பயணிக்கத் தொடங்குகிறார்கள். ஆனால் இது வெகு சிலரால் மட்டுமே முடிகிறது. பெரும்பாலான பெண்கள் சமூகத்தின் திணிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை அவப் பெயர் உருகாகி விடுமோ என்று பயந்து, பின்பற்றத் தொடங்குகிறார்கள். பல பெண்கள் தாமாகவே சமூகத்திலிருந்து தம்மை விலக்கிக் கொள்கிறார்கள்.

கணவனின் இழப்பில் உடைந்து போயிருப்பவள், கேள்வி கேக்கப் போவதில்லை என, இழப்பின் மேல் திணிக்கப்பட்டிருக்கும் சமூகத் தடைகளும் அவளுக்கான இனிவரும் வாழ்வை இருட்டாக்குவதற்கான முயற்சிகளும் கலாசாரத்தின் கையாலாகாத தனம் என்றே கருதமுடியும். பெண்ணைப் பொட்டு எனும் அடையாளத்திற்குள் தந்திரமாகச் சிக்க வைத்து வேடிக்கை பார்க்கிறார்கள் என்பதே எனது கருத்து! ‘பொட்டு’ என்பதற்குப் பின்னால் பெண்களின் அடிமைத்தனம் வேர் விட்டு விழுதெறிந்து தாண்டவமாடிக் கொண்டிருப்பதை ஏனோ அவள் அறிந்தும், அறியாதது போலிருக்கிறாள். ஆண்கள் அடிமைப்படுத்துகிறார்கள் என்று குரல் கொடுக்கும் சில சமயங்களில் பெண்களும் பெண்களை அடிமைப் படுத்துகிறார்கள், என்பதைப் பற்றிப் பெரிதளவு பேசாமல் இருந்து விடுகிறார்கள். தேவையற்ற சடங்குகளின் கடத்திகளாக பெண்கள் இருக்கிறார்கள். பொட்டழிக்கும் இந்தச் சடங்குகளைப் பெண்களே நடத்துகிறார்கள். ஆக நாம் என்ன செய்கிறோம் என்பதை அறியாமல் கண்மூடித்தனமாக நடக்கும் இந்த



நடத்தைக் கோலங்களை, நம் படித்த சமுதாயம் இன்னும் பார்த்துக் கொண்டிருக்கப் போகின்றதா?

வடக்கு கிழக்கில் இறுதிப் போரில் மட்டும் 89000 கணவனை இழந்த பெண்கள் இருக்கிறார்கள். வடக்கு கிழக்கில் மட்டுமல்ல ஏனைய பகுதிகளிலும் யுத்தம் தவிர்ந்த வேறு காரணங்களினால் கணவனை இழந்த பெண்கள் ■

29 ஆம் பக்கம் பார்க்க... »







விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

05 ஆம் பக்கத் தொடர்ச்சி...



# முக்கோண காதலால் முறிந்து போன டயானா திருமணம்



இதுவரை கண்டிராத'' ஒரு திருமணமாக நடந்தேறியது''. 74 நாடுகளைச் சேர்ந்த 750 மில்லியன் மக்கள் இதைத் தொலைக்காட்சியில் கண்டு ரசித்தார்கள். இவர்களை விட, திருமண ஊர்வலப் பாதையிலே லண்டன் தெருக்களில் நின்று நேரடியாக ஊர்வலத்தைப் பார்த்தவர்கள் சுமார் ஆறு லட்சம் பேர்.

திருமணம் முடிந்த பின்னர், எல்லா புதுமணத் தம்பதிகளும் தமது அன்பளிப்புகளைப் பிரித்துப் பார்க்க ஆரம்பிப்பார்கள். சார்ள்ஸம்–டயானாவும் இதேபோல, தமது தேனிலவில் பொட்டலங்களைப் பிரித்துப் பார்க்க ஆரம்பித்தார்கள். ஆண்கள் shirt cuff- links ஆங்கில எழுத்து C யும் C யும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து அதில் பொறிக்கப்பட்டிருந்தன. டயானா அதைப் பார்த்து ''இந்த cuff- links உங்கள் தோழி கமீலா தந்ததுதானே?''.

''ஆமாம்; அதிலென்ன தப்பு? அது ஒரு தோழியின் அன்பளிப்பு.''– இந்த உரையாடல் பிற்காலத்தில் அவர்களது மணவாழ்வில் ஏற்பட்ட பல சண்டைகள் மோதல்கள் ஆகியவற்றுக்கான ஒரு அபாயச் சங்கொலியாக அமைந்தது. மண வாழ்வில் தொடர்ச்சியாக 1982 ஜூன் 21 இளவரசர் வில்லியம் பிறந்தார். 1983ல் தம்பதிகள் ஆஸ்திரேலியாவுக்கும் ஜப்பானின் டோக்கியோவுக்கும் சென்ற போதும் ஆயிரக்கணக்கானோர் கூடி அவர்களுக்கு அமோக வரவேற்பு வழங்கப்பட்டது. மகாராணியின் புதல்வர், அடுத்த மன்னர் என்பதற்காகவே இந்த வரவேற்பு என்று சில பத்திரிகைகள் எழுதின. ஆனால் உண்மையில் இளமையும் கவர்ச்சியும் மிக்க டயானாவுக்காகவே இந்தக் கூட்டம். அழகி டயானா தேச வரம்புகளை எல்லாம் தகர்த்து எறிந்து மக்கள் மனதை கொள்ளைக் கொண்டார். 1984ல் ஹாரி பிறந்தார்.



1986 கமீலா மீதான சபலம் சார்ள்ஸ் மனதில் தலை தூக்கியது. வீட்டிலே அழகான பச்சைக் கிளி போன்ற ஒரு மனைவி இருந்தாலும், சில ஆண்கள் குரங்கு போன்ற வைப்பாட்டியை தேடிப் போவார்களாம். 1989ல் பிறந்தாள் விழா ஒன்று நடந்த போது அதற்கு கமீலாவும் சார்ள்ஸம் அழைக்கப்பட்டிருந்தனர். ஆனால் டயானாவுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. முன்னறிவித்தல் எதுவுமில்லாமல் டயானா திடீரென்று உள்ளே நுழைந்தார். மாடிக்கேறி நீங்கள் எல்லோரும் கீழே செல்லுங்கள், நான் கமீலாவோடு பேசப் போகிறேன் என்று ஆண்களை கீழே அனுப்பினார். ''கமீலா, உனக்கும் சார்ள்ஸக்கும் இடையில் என்ன நடக்கிறது என்பது எனக்குத் தெரியும். நானொன்றும் அசட்டு முட்டாள் என்று எண்ணிவிடாதே''.

கமீலர் ஹஹ டயானா உனக்குத்தான் –நீ விரும்பிய அனைத்துமே கிடைத்திருக்கிறதே, உலகிலுள்ள அத்தனை ஆண்களும் உன்னை விரும்புகிறார்களே. அழகான இரண்டு குழந்தைகள் உனக்கு இருக்கின்றனவே.''

டயானர் ''ஆனால் எனக்கு என் கணவர் வேண்டும்!''

அன்றிரவு வீடு திரும்பியதும் சார்ள்ஸக்கும் டயானாவுக்கும் இடையே ஒரு பூகம்பமே வெடித்தது. இந்த மோதல் இப்படியாக அதிகரித்துக் கொண்டே போனது. மகாராணியாரின் வேண்டுகோளின்படி சார்ள்ஸம் டயானாவும் 1996ல் விவாகரத்துக்கு விண்ணப்பித்து அதைப் பெற்று கொண்டார்கள்.

விவாகரத்து வழங்கப்பட்ட மறு வருடம் –1997 ஆகஸ்ட் 31ஆம் திகதி பிரான்ஸின் சுரங்கப் பாதையில் மர்மமான முறையில் வாகன விபத்தொன்றில் உயிரிழந்தார்.





டயானா உயிருடன் இருந்த காலத்தில் சார்ள்ஸடனான உச்சக்கட்ட மோதலின் போது 1994ல் பிபிசியின் பனோரமா நிகழ்ச்சிக்கு டயானா செவ்வி வழங்கினார். பிபிசியின் மார்ட்டின் பஷீர் என்றவர் நடத்திய இந்தச் செவ்வி அரச குடும்பத்தையும் பொது மக்களையும் புரட்டிப் போட்டது.

அரண்மனை இரகசியங்களை, சார்ள்ஸ்–டயானா பற்றிய அந்தரங்க இரகசியங்களை டயானாவின் மெய்க் காப்பாளர் அவரது சகோதரர்களின் காவல் அதிகாரிகள் லஞ்சப் பணம் பெற்று கொண்டு கசியவிட்டார்கள் என்று காட்ட விரும்பிய மார்ட்டின் பஷீர், போலியான வங்கி ஆவணங்களைக் காட்டி பேட்டிக்கு அனுமதி பெற்றார் என்று குற்றஞ்சாட்டி பிரிட்டிஷ் ஊடகங்கள் பிபிசி மீதும் மார்ட்டின் பஷீர் மீதும் குரோத மனப்பான்மையோடு குற்றச்சாட்டுகளை முறைப்பாடுகளை எழுதிக் கொண்டே இருந்தன. உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவர் தலைமையில் விசாரணை நடத்தப்பட வேண்டுமென்றும் குரல்கள் எழுப்பப்பட்டன. இளவரசி டயானாவின் பேட்டி ஒலிபரப்பான ஆண்டு 1994. இது பற்றிய பல விஷயங்கள் நீதி விசாரணைக்குப் பின்னர் தெரிய வந்திருப்பது 2021ல். ஆக மொத்தம் 27 ஆண்டுகளாக ஊடகங்கள் பல மார்ட்டினைப் பற்றியும் பிபிசியைப் பற்றியும் வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டன.

மேல்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியின் அறிக்கை கடந்த வாரம் வெளியாகிய போது அதை பிபிசி மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டது. டயானாவுடனான பேட்டியை பிபிசி பெற்ற விதம் நீதிபதியால் கண்டிக்கப்பட்டது. பிபிசி நிர்வாகம் இந்த விஷயத்தில் போதுமான அளவுக்கு மேற்பார்வை செய்யவில்லை என்றும் நீதிபதி கூறியிருக்கிறார்.

1994 பிபிசி பேட்டி பற்றி இளவரசி டயானா எழுதிய கடிதமொன்று நீதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டது. டயானா தனது கைப்பட எழுதிய இந்தக் கடிதம் 22.12.1995 என்று திகதியிடப்பட்டிருந்தது. அதில் அவர் குறிப்பிட்டிருந்ததாவது;

''என்னைப் பேட்டி கண்ட மார்ட்டின் பஷீர், எனக்கு எந்த ஆவணத்தையும் காட்டவில்லை. எனக்குத் தெரியாத, நான் முன்னர் அறிந்திராத எந்தத் தகவலையும் அவர் எனக்கு வழங்கவில்லை. பிபிசிக்கு இந்தப் பேட்டியை வழங்கும்படி கேட்டு என் மீது எந்தவிதமான வற்புறுத்தலும் எவராலும் திணிக்கப்படவில்லை. பிபிசிக்கு நான் பேட்டி வழங்கியமை பற்றி எனக்கு எந்தவிதமான வருத்தமும் கிடையாது. இப்படிக்கு டயானா''.

பாரிஸ் சுரங்கப் பாதையில் அந்த இளம் இளவரசி மரணத்தை நோக்கி தள்ளப்பட்ட போது அவருக்கு வயது வெறும் 36 மட்டுமே.

எட்டடுக்கு மாளிகையில் ஏற்றி வைத்த தன் தலைவன் செய்த தகிடுதத்தங்களால் மனமுடைந்து சிதறிய ஒரு அப்பாவி அரசகுமாரி பிபிசி பேட்டியில் கூறிய விஷயங்களில் முக்கியமானது;

''திருமண பந்தத்தில் இருவருக்கு மட்டுமே இடமுண்டு இதில் மூன்றாவது நபருக்கு இடமேயில்லை''.







# வெற்றி மாறன் -சூர்யா கூட்டணியில் வாடிவாசல்



**வெ**ற்றிமாறன் –சூர்யா கூட்டணியில் உருவாகிவரும் வாடிவாசல் படத்தின் படப்பிடிப்பு கொரோனா தாக்கத்தின் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்த படத்தின் படப்பிடிப்பு வரும் செப்டம்பர் மாதத்தில் மீண்டும் ஆரம்பிக்கவுள்ளதாக படக்குழு தரப்பில் கூறப்பட்டுள்ளது.

சூரரைப் போற்று வெற்றி நடிகர் சூர்யா தனது தேர்ந்தெடுத்த கதைகளால் வெற்றிப் படங்களை கொடுத்து வருகிறார். சமீபத்தில் வெளிவந்த இவரது சூரரைப் போற்று படம் மிகப்பெரிய வெற்றியை அடைந்துள்ளது. மேலும் அடுத்ததாக நவரசா படத்தின் வெளியீட்டுக்காக சூர்யா காத்திருக்கிறார்.

# 20 வயது இளைஞனை காதலிக்கும் புதிய படத்தில் அனுஷ்கா





**த**மிழ், தெலுங்கு திரையுலகில் முன்னணி கதாநாயகியாக வலம் வந்த அனுஷ்கா பாகுபலி படத்தில் நடித்து மேலும் பிரபலமானார். பின்னர் அனுஷ்காவின் உடல் எடை கூடியதால் பட வாய்ப்புகள் குறைந்தன. வெளிநாடு சென்று சிகிச்சை பெற்று எடையை குறைத்து வந்த அவருக்கு சமீபத்தில் மீண்டும் எடை கூடியது.

இதனால் புதிய படங்களில் நடிக்க அனுஷ்காவை யாரும் அணுகவில்லை.இந்த நிலையில் அனுஷ்கா 20 வயது இளைஞருக்கும், 40 வயது பெண்ணுக்குமான காதலை மையப்படுத்தி தயாராகும் சர்ச்சை படத்தில் நடிக்க இருப்பதாகவும் அவருக்கு ஜோடியாக 20 வயது இளைஞராக தெலுங்கு நடிகர் நவீன் பாலிஷெட்டி நடிக்கிறார் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

# நல்ல நேரம் கே.ஆர்.விஜயா



**மு**த்துப்பல்லழகி முன்னாள் கதாநாயகியான கே.ஆர்.விஜயா 400 படங்களை தாண்டி இன்னமும் நடித்துக் கொண்டிருக்கிறார். எம்.ஜி.ஆர், சிவாஜிகணேசன் ஆகிய இரு பெரும் நடிகர்களுடனும் பல படங்களில் ஜோடியாக நடித்தவர், இவர் குறிப்பாக சிவாஜியுடன் அதிக படங்களில் ஜோடி சேர்ந்த நாயகிகள் பட்டியலில் இவரும் இருக்கிறார்.

நெஞ்சிருக்கும் வரை முத்துக்களோ கன்னம் பாடல் ஆகட்டும், ஊட்டிவரை உறவில், பூ மாலையில் ஓர் மல்லிகையாகட்டும், ஏன் தங்கப்பதக்கத்தில் அவர் நடிப்பாகட்டும் மறக்கமுடியுமா?

இன்று அவர் நடித்து முடித்துள்ள புதிய படமான 'சண்டக்காரி' படம் விரைவில் திரைக்கு வரயிருக்கிறது. 'முதுமை' பருவத்தை எட்டிவிட்டாலும், அவர் சரியான நேரத்தில் படப்பிடிப்புக்கு வந்தார். ஒருநாள் கூட தாமதமாக வந்ததில்லை. காலை 9 மணிக்கு படப்பிடிப்பு என்றால், 5 நிமிடம் முன்கூட்டியே வந்துவிடுவார். எப்பவுமே நல்லநேரத்திற்கு வந்துவிடுவார். 'சண்டக்காரி' படத்தின் இயக்குனர் மாதேஷ் இவ்வாறு கூறியுள்ளார். மக்கள் திலகத்துடன் நல்ல



நேரம் படத்தில் நடித்தபோது இந்த நேரம் தவறாது வருவதைக்கற்று இருப்பாரோ? இப்படித்தான் இருக்க வேண்டும் பொம்புளே இன்பத்தமிழ் நாட்டிலே என்று வாத்தியாரிடம் கற்றவள் ஆச்சே!

27 ஆம் பக்கத் தொடர்ச்சி...

வாழ்க்கையோடு போராடிக் கொண்டிருக்கிறாங்கள். தனிமைப்படுத்தப்பட்ட துணையை இழந்த இவர்கள் இன்றைய பொருளாதார நெருக்கடியில் வாழ்வாதாரத்தைப் பற்றிச் சிந்திப்பதா? இல்லை இந்த அடக்கு முறைகளில் நொந்து போய் முடங்கிக் கிடைப்பதா? நமது சமூகம் பின்னடைந்து போவதை நாம் சந்தோசமாகப் பார்த்துக்கொண்டிருக்கப் போகிறோமா?

இந்தக் கேள்விகளை நான் என்னை நோக்கியும், என் சார்ந்த சமூகத்தை

# போட்டு குறும்படம்!

## புட்டு புட்டுச் சொல்லும் செய்தி என்ன!

நோக்கியும் கேட்பதற்காக 'பொட்டு' எனும் தலைப்பில் குறும்படம் ஒன்றை எழுதி இயக்கி வெளியீடு செய்திருக்கிறேன். இதைப் 'பொட்டு' யூட்டியூப் தளத்தில் பார்வையிட முடியும். படத்தின் உருவாக்கத்தில் அதிகளவாக பெண்களே ஈடுபட்டிருக்கின்றனர். தயாரிப்பு , இயக்கம் ஒளிப்பதிப்பு, ஒலியமைப்பு,



ஆடை வடிவமைப்பு , ஒப்பனை, உதவி இயக்கம், தயாரிப்பு மேற்பார்வை , தயாரிப்பு முகாமை, புகைப்படம், நடிப்பு போன்றவற்றில் பெண்கள் பங்காற்றியிருந்தனர். இது கணவனை இழந்த ஓர் பெண்ணின் போராட்டத்தைப் பற்றிப் பேசுகிறது.

நாம் அனைவரும் எழுந்து பேச எத்தனிப்போம், மாற்றங்கள் நிச்சயம் நிகழும்! ஒரு பெண் கணவனை இழந்த பின் தனக்கான, தன் குழந்தைகளுக்கான தேவைகளையும் எதிர்காலத்தையும் அழகான திருப்தியான வாழ்வையும் தனி மனிதியாக நின்று தைரியத்தோடு உருவாக்க முனைகிறாள் என்றால், அவளை விட மங்கலமானவள் வேறு யார் இருக்க முடியும்? அவளோடு தொடங்குங்கள், உங்கள் விடியல் விழாவாயிருக்கும்!

# நீர்வையூர் செட்டியாருக்கு அமுதவிழா வாழ்த்துகள்



நீர்வையூர் திரு. சிவசுப்பிரமணியம் அவர்கள் தனது அகவை எண்பதை நிறைவு செய்து அமுதவிழா (07.06.2021) காண்டார். வாழ்க்கையில் உயர வேண்டும் என்ற இலட்சியத்துடன் வாழ்ந்து வெற்றி பெற்றவர் அவர். நீர்வைக் கந்தனும் இராசுக்குருக்களும் அரவணைத்தமையால் தான் இந்த உயர்வு தனக்கு ஏற்பட்டதாக அடிக்கடி கூறிக் கொள்வார்.

செட்டியார் என்பது ஒரு வருணத்தாருக்குரிய பெயராக இருந்த போதிலும் வருணம் சாராத ஒருவருக்குச் செட்டியார் என ஊர் மக்கள் பெயர் வழங்கி அழகு பார்த்தனர் என்றால் அது சிவசுப்பிரமணியம் செட்டியாருக்காகத்தான் இருக்கும். உழைப்பினால் உயர்ந்து திருமுருகன் பல்பொருள் அங்காடி திருமுருகன் திருமண மண்டபம் என நீர்வேலியில் அமைத்ததோடு அறநெறிப் பாடசாலை ஒன்றையும் அமைத்து பல்வேறு அறப்பணிகளையும் மேற்கொண்டு வருகின்றார்.

அவரது மக்கள் - பெறா மக்கள் எனப்பலர் வணிக நிலையில் உயர்வு பெற்றுள்ளனர். யாழ்ப்பாணத்தில் உள்ள மிகப்பெரும் நட்சத்திர விடுதி ஒன்று இவர்களது குடும்பத்திற்குச் சொந்தமானது. அவர்கள் எல்லோரது உயர்வின் பின்னாலும் இந்தச் சாதனை மனிதர் இருக்கிறார். இன்றும் வாழ்வில் எளிமையைக் கைக்கொள்கிறார்.

இன்னும் பல்லாண்டுகள் இனிதே வாழ வெற்றிமணியின் இனிய வாழ்த்துகள்.

**ஆக்கம்: லலீசன் (துணை அதிபர் ஆசிரியர் கலாசாலை கோப்பாய்.)**

விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

Deutsche Bank

# Willkommen in Ihrer Filiale Duisburg.



Janagran Mahendran
Berater Private Banking

Als Kunde erwarten Sie heute nicht nur erstklassige Finanzlösungen, sondern eine faire und verständliche Beratung. Wir wollen Ihren Ansprüchen gerecht werden – und haben uns zum Ziel gesetzt, Sie als verlässlicher und leistungsstarker Partner auf Ihrem privaten und geschäftlichen Weg zu begleiten. Dafür verbinden wir die Reichweite, Erfahrung und Leistungsstärke eines global führenden Finanzdienstleisters mit der Zuverlässigkeit und Kundennähe einer Hausbank. Sprechen Sie jetzt mit uns.

Filiale Duisburg
Königstraße 7–11, 47051 Duisburg
Telefon (0203) 9922-521
janagran.mahendran@db.com


Deutsche Bank
Mehr Wünsche erfüllen.
Möglich mit dem PrivatKredit, der Ihnen finanziellen Spielraum gibt.
#PositiverBeitrag
Jetzt mit 1,75 % effektivem Jahreszins.*
Nettodarlehensbetrag 1.000 EUR
Effektiver Jahreszins* 1,75 %
Fester Sollzinssatz p. a. 1,74 %
Monatliche Rate 84,12 EUR
Laufzeit in Monaten/Anzahl Raten 12
Zu zahlender Gesamtbetrag 1.009,43 EUR
Das Angebot entspricht dem repräsentativen Beispiel gemäß § 6a Absatz 4 PAngV.
*Gilt für einen Kreditbetrag von 1.000 bis 50.000 Euro bei 12 Monatsraten (gilt nur für Kunden ohne bestehenden Deutsche Bank PrivatKredit). Diese Kondition erhalten mindestens 2/3 der Kunden bei Abschluss eines Deutsche Bank PrivatKredits. Laufzeit in Abhängigkeit vom Ratenzahlungsbeginn: 12 bis 16 Monate. Das Angebot ist gültig bis 31. März 2021. Bonität vorausgesetzt.
Darlehensgeber: Deutsche Bank AG, Theodor-Heuss-Allee 72, 60486 Frankfurt am Main

EurAsian-Tour

VALUTRANS MONEY TRANSFER

EurAsian-Tour Further Str.146 41462 Neuss
Rishi Ganeshamoorthy | Rishi 0174 96 44 965
Tel:02131 7387 83 Fax:02131 73 87 84 | info@eurasian-tours.com

Jasmine Silk House

அனைத்து சேலைகளும் வகை
வகையாக வாங்க வாருங்கள்
என்றும் சிறப்பு விலை
தொடர்பு இலக்கம்: 01731937325

ஆடைகளின் ராணி

Tel: 02102 844744
HP: 0173 1937 325

"Jasmine Silk House"
Fester Str.50- 40882 Ratingen

Asia Bazar

துரித பணமாற்றுச்சேவை

ஆசிய, ஆபிரிக்க உணவு வகைகள்
வியாழன், சனிக்கிழமை தோறும்
இலங்கை, இந்திய உடன்
மரக்கறிவகைகள் கடல் உணவுப்
பொருட்கள் இன்னும் பல...

Ria Money Transfer
VALUTRANS MONEY TRANSFER
MoneyGram

உரிமையாளர்: பா.கணேஷ்

An der Stadt Mauer 2-4 41061 Mönchengladbach
Tel: 02161 208303 | Fax: 02161-309282

PIRRUNTHA SILKS
Exclusive Indian Clothing & Jewelry

Ludwig str.87a
70197
Stuttgart

தரம்மிக்க தங்க நகைகள்
நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில்
அமைந்த சேலைகள்
மற்றும் இமிற்றேசன்
நகைகள் அனைத்திற்கும்
நீண்ட கால நம்பிக்கை
மிக்க ஸ்தாபனம்
பிருந்தாஸ்

Stuttgart பிருந்தாஸ்...

Tel: 0711 615 8976/ 0170 334 4059

Shakthy Foundation

துவாரகமாய் முதியோர் இல்லம்

SHAKTHY FOUNDATION

தொடர்புகளுக்கு:-
Dwarakamal Senioren WG
Alpenroder Str.59 65936 Frankfurt am Main, Germany
Tel: 0152-14069504 Mrs.Nava (Resha)

சீரடி பாபாவின் அருளால் ஜேர்மனி பிராங்க்பர்ட் நகரில் 01.10.2020 ஆம் திகதி துவாரகமாய் முதியோர் இல்லம் உருவாகியுள்ளது. எமது அன்பார்ந்த சகோதர சகோதரிகளே உங்களுக்கு ஓர் நற்செய்தி. உங்கள் பெற்றோரை உங்களைப் போலவே அன்பாக அரவணைத்து பராமரிப்போம் கவலையை விடுங்கள் பிராங்க்பர்ட் நகரில் 01.10.2020 ஆம் தகதி முதல் துவாரகமாய் முதியோர் இல்லம் அமைந்துள்ளது. இங்கு தமிழில் உரையாடி நமது தமிழ் உணவுடன் முதியவர்கள் பராமரிக்கப்படுகின்றார்கள். இதற்கு அருகாமையில் அழகான பூங்கா மற்றும் ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயம் மற்றும் சித்தி விநாயகர் ஆலயம் அமைந்தள்ளது. இல்லத்தினால் பெறும் வருமானங்கள் 28.03.2018 திரு. திருமதி. நவநீதன் நிஷாந்தியாவினால் இலங்கையில் உருவாக்கப்பட்ட மாணவர் விடுதிக்கு செலவு செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். இவ்விடுதியில் வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள பல மாணவர்கள் கல்வி கற்று வருகின்றார்கள்.

Shakthy Foundation
Acc No:
173020027815
HATTON
NATIONAL BANK
Trincomale,
Srilanka

Shakthy Foundation T/M/Chennaiyoor, Central College, Mutur, Trincomale, Srilanka. | S.Rajathurai: +94 77 338 4637

HSB SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN

069-97 693 374
info@saravanaabhavan.de
kaiserstraße 68, 60329 Frankfurt am Main

புதிய இடத்தில்!! புதிய பொலிவுடன்!!

India Singapore Malaysia Thailand Hong Kong U.A.E. K.S.A. Oman Qatar Bahrain Kuwait U.K France Germany Australia South Africa Canada U.S.A

STAR IMPEX
Lebensmittel Grosshandel e.K.

StaR Impex : Inh : K.Sivasubramaniam
Tel: 0231 860 26 96

AGAM அகம்
Nila
Double Horse
Aachi
BTM
Rabeena

Franziusstrasse 150 (TOR3) DE -44147 Dortmund
Tel: 0231/8602696| Fax: 0231/8602698